உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 ] பராபவ - சித்திரை - 10—5—66 [ இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## காலகாலர்

தமக்கென்று ஓர் உருவமும், தொழிலும், பெயரும் இல்லாத கடவுள், உயிர்களின் பொருட்டு அளவற்ற உருவமும் தொழிலும் கொண்டு, அவற்றிற்கேற்ற பல காரணப் பெயர்களையும் கொண்டு நிற்கின்றார். அவை களில், 'காலகாலர்' என்பதும் ஒன்று.

காலனுக்குக் காலனாய் உள்ளவர் காலகாலர். காலன் யாவன்? அவனுக்குக் காலனாய் நிற்கும் கடவுள் யார்? எல்லாவற்றையும் இயக்குவது காலம். அக்காலத்தை இயக்குபவன் காலன். அவனையும் இயக்குபவர் கடவுள். காலனை இயக்குபவர் கடவுளாயின், காலத்தை இயக்கும்

காலன் யாவன்? காலத்தை இயக்கும் காலன் கடவு ளருள் ஒருவன், 'கடவுள்' என்பவர் யாவர்? 'கடவுளர்' எனப்படுவோர் யாவர்? எல்லா உலகங்கட்கும், எல்லா உயிர்கட்கும் முதல்வராய் உள்ளவர் கடவுள். இவரை 'முதற் கடவுள்' எனச் சிறப்பித்துக்கூறுவர். 'முதற்கடவுள்' என்பதையே, 'ஆதி பகவன்' என்று கூறினர் திருவள்ளுவர் என்பது, அதன் உரையிலே நன்கு விளங்கிக் கிடக் கின்றது. அம் முதற்கடவுளின் அருளால் ஒவ்வோரு தொழிலைப் பெற்று அதனை நடத்தி வருவோர் கடவுளர். 'தேவர்' எனப்படுவோர் இவர்களே. தேவர்களுக்கெல் லாம் தேவராதல் பற்றி, முதற்கடவுளை, 'தேவதேவர்' எனவும், 'மகாதேவர்' எனவும் கூறுவர் பெரியோர்.

உலகத்தை ஆக்கிக் காத்து அழித்தற்குக் கடவுள் இருக்கும் போழுது, கடவுளர் வேறு எதற்கு எனின், கடவுளர் வேண்டப்படுவது, கடவுளுக்குத் துணை புரிதற் போருட்டு அன்று; மற்று, அவர்களது விருப்பத்தை நிரப்பு தற் போருட்டேயாம்.

கடவுள் தனக்கென ஒன்றையும் விரும்புதல் இல்லை. உயிர்கள் அவ்வாறன்றித் தமக்கெனப் பலவற்றை விரும்பு கின்றன. வேண்டுவார் வேண்டுவதை ஈயும் கடவுள், அவ்விருப்பத்திற் கேற்பப் பலவற்றை அவ்வுயிர்களுக்கு வழங்கியருள்கின்றார். ஆயினும், விருப்பம் மட்டும் போதிய தாகாது; விரும்பியவற்றைப் பேறுதற்கேற்ற முயற்சியும் வேண்டும். அம்முயற்சியே 'புண்ணியம், தவம்' என் றெல்லாம் சோல்லப்படுகின்றது. எனவே, அவரவரது புண்ணியம் அல்லது தவத்திற்கேற்பக் கடவுள் அவரவரது விருப்பத்தை நிரப்பியருளுகின்றார். "மேலைத் தவத்தளவே யாகுமாம் தாம்பெற்ற செல்வம்" என்பது ஔவையார் வாக்கு.

உயிர்கள் பேற விரும்புவனவற்றுள், தலைமை அல்லது அதிகாரம் என்பது ஒன்று. இதுவும், அவரவரது புண்ணியத் திற்கேற்ப அவரவருக்குக் கடவுளால்அருளப்படும். எனவே,

உலகில் உள்ள அரசர், அமைச்சர், படைத்தலைவர் முதலிய தலைவர் பலரும், அவ்வத்தலைமைகளைத் தம் தம் புண்ணியத் திற்கேற்பக் கடவுள் அருளால் எய்தப் பெறுபவர்கள் என்பது தெளிவாகும்.

இது, காணப்பட்ட இம் மண்ணுலகில் நிகழ்வது. இனி, காணப்படாத விண்ணுலகிலும் இத்தகைய தலைவர் உளர்; அவர்களே இந்திரன், அயன், அரி, அரன் முதலாகச் சொல்லப்படுபவர்கள். இன்னும் உலகத்தின் பகுதிகள் ஒவ்வொன்றிற்கு உரிமைபெற்று அவைகளை இயக்கி வருபவரே, 'தேவர்' எனப்படுகின்றனர். இவர்கள், 'வாயு தேவன், அக்கினிதேவன், திருமால், கலைமகள், நிலமகள்' முதலாகச் சொல்லப்பட்டுவருதல் வெளிப்படை. கடவுளது செயலாகிய உலகை இயக்கும் தொழில்களுக்கு உரியவ ராயினமை பற்றி இவர்கள், 'கடவுளர்' எனப்படுகின்றனர் எனினும், அமைச்சர் படைத்தலைவர் முதலியோர் தம் தம் தொழிலை அரசனது கருத்தின்வழியே நடத்துதலன்றித் தம் இச்சைவழியே நடத்தமாட்டார். அதுபோலவே, கடவுளர் பலரும் தம் தம் தொழிலை முதற்கடவுளது கருத்தின் வழியே நடத்துதலன்றித் தம் தம் இச்சைவழியே நடத்துதல் இய லாது. இக்கடவுளர் பலரும ஒவ்வொன்றிலே முதன்மை பெற்று நிற்பவர். முதற்கடவுள் எல்லா முதன்மையும் உடையவராதலின் அவரை, 'முழுமுதற் கடவுள்' எனவும் கூறுவர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என, 'கடவுள் ஒருவரே' என்று சொல்லிவிட்டு, 'முப்பத்துமுக் கோடி தேவர்கள் உளர்' எனக்கொண்டு, பல தெய்வ வழிபாட்டை வேதமதங்கள் செய்து வருவது எவ்வாறு பொருந்தும் என்று ஐயுறுவோர், இதனை உணர்தல் வேண்டும் இவ்வகையில் காலக் கடவுளாய் நின்று காலத்தை இயக்கி வருபவனே கூற்றுவன் அல்லது இயமன்.

காலத்தைக் கடந்தோர் ஒருவரும் இல்லை. அதனால், காலனை வென்றவரும் ஒருவரும் இலர். பிறப்பினை உடைய உயிர்கள் யாவும் காலதத்துவத்திற் கட்டுப்பட்டே இயங்கு கின்றன. அதனால், அவை யாவும் காலனைக் கடக்குமா

றில்லே. காலனும் காலத்தைக் கடந்தவனல்லன். இதை அவன் மார்க்கண்டேயரிடம் பின்வருமாறு கூறியதாகக் கந்தபுராணம் கூறுகின்றது

" கனக்கும் முண்டகக் காமரு கண்ணினன்
றனக்கும் உண்டு ; சதுர்முகற் குண்டு; மற்று
எனக்கும் உண்டு பிறப்பிறப் பென்றிடின்
உனக்கும் உண்டென் றுரைத்திடல் வேண்டுமோ "

கடவுள் பிறப்பில்லாதவராகலின், அவரே காலத்திற் கட்டுப்படாது நின்று, அதனையும் இயக்குபவராகின்ருர். ஆகவே, காலனும் அவரது ஆணையை ஏற்று நடாத்துங்கால், அவரது கருத்தின்படி நடப்பின் அவரால் பயனையும், அவரது கருத்துக்கு மாருக நடப்பின் அவரால் ஒறுப்பினையும் அவன் அடைபவனுகின்ருன். இவ்வுண்மையையும், கடவுளே யன்றிக் கடவுளைச் சார்ந்த அடியாரும் காலத்தைக்கடக்க வல்லவராவர் என்னும் உண்மையினையே மார்க்கண்டேயர் வரலாறு அறிவிக்கின்றது.

பிறபிறப்பைக் கடத்தல் தவத்திஞலே உளதாகும் என்பதைத் திருவள்ளுவர்,

" கூற்றங் குதித்தலும் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு "

என்று குறிக்கின்ருர். அங்ஙனம் தவத்தால் காலனைக் கடந்தவர் மார்க்கண்டேயரே. அதனுல், மார்க்கண்டர் செய்த தவமே தவமாகின்றது. இதனைக்கொண்டே ஔவை யார், " சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு " என்று கூறு கின்ருர்.

சிவனடியார், " நாம் ஆர்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம் " என்று இருப்பவர் என்பதனையறியாது, மார்க் கண்டேயர்பாற் சென்று தனது வீரத்தைக்காட்டப் புகுந்த காலன், அவர் பொருட்டாகச் சிவபெருமானுல் உதையுண்டு ஒழிந்தான். பின்னர்த் திருமால் முதலிய தேவர்களது வேண்டுகோளினுல் அப்பெருமான் உயிர்ப்பித்தருள, அறிவு

பெற்றுச் சிவனடியார்களுக்கு அஞ்சி வாழ்பவனுயினுன். இம்மார்க்கண்டேயரது வரலாற்றைச் சொல்பவர், கேட்பவரிடத்திலும் இயமன் அணுகான் என்பது மரபு. ஆகவே, அவமிருத்துவின் நீங்கி நீடிய வாழ்நாளைப்பெற விரும்புவோர், சிவபெருமானது முதன்மையை உணர்ந்து, அவரை வழிபடுத்தலே தக்கது. இதற்கு வாய்ப்பாகத் திருக்கடவூர்த் தலம் விளங்குகின்றது.

திருக்கடவூரில் சிவபெருமான் மார்க்கண்டேயர் பொருட்டுக் காலனை உதைத்த காலகாலராய் இருந்து அடியார்க்கு அருள்புரிகின்ருர். காலனைக்கடந்த பெருமான் வீற்றிருத்தலால் இத்தலம் கடவூராயிற்று. இங்குள்ள இலிங்கப்பெருமானும், மிருத்துவைப் போக்கிய அமிர்தலிங்கரே. அமிர்தலிங்கேசரையும், காலசங்கார மூர்த்தியையும் எப்பொழுது வழிபடினும் எமபயம் நீங்கலாகும் என்ருலும், சித்திரைப் பெருவிழாவில் காலனையுதைத்த விழா நிகழும்பொழுது சென்று கண்டு வழிபட்டவர்கள் அவமிருத்துக்களினின்றும் நீங்கி நீடிய வாழ்நாள் பெற்று வாழ்தல் உறுதி. இக் காலசங்கார விழாவன்று இத்திருத்தலத்தில் அன்பர்கள் கூட்டம் அளவின்றி இருக்க, அமுதகடேசப் பெருமான் காலசங்காரராய் எழுந்தருளிவந்து காலனைச் சங்கரித்து மார்க்கண்டேயரைக் காத்தருளும் காட்சி, கண் கொள்ளாக் காட்சியாகும். தருமையாதீனத்திற்குச் சொந்தமான இத்திருக்கோயிலில் இவ்வாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் உடன் இருந்து இனிது நிகழ்த்துவிக்க அண்மையில் நிகழ்ந்த இவ்வருட்காட்சி, அன்பர்களது கண்ணையும் கருத்தையும் விட்டு நீங்குமோ!

"அன்ருலின் நிழற்கீழ் அறம் நால்வர்க் கருள்புரிந்து
கொன்ருய் காலன்உயிர் கொடுத் தாய்மறை யோனுக்கு; மான்
கன்ருருங்கரவாகட ஊர்த்திரு வீரட்டத்துள்
என்ருதைபெருமான் எனக் கார்துணை நீயலதே".

திருச்சிற்றம்பலம்.

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## இன்பத் தொட்டில்

பேரன்ப னல்லேன்; பிழைசெய்யேன் தானல்லேன்;
ஓரன்பும் இல்லா உலுத்தனேன்- பேரன்பு
காட்டிஎனைக் காட்டிஉனைக் காட்டிஇன்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநா தா.

— குருஞானசப்பந்தர்.

யாவரும் இன்பத்தையே விரும்புகின்றனர் - நிறைந்த இன்பத்தை விரும்புகின்றனர். இன்பத்தைக் கெடுப்பது துன்பம் - மனக்கவலை. இஃது இல்லாதிருக்கும் காலம் எது? குழந்தைப் பருவமே எனலாம். பசி, பிணி முதலியவை எக்காலத்தும் இருப்பினும், மனக்கவலை என்பது குழந்தைப் பருவத்தில் அறியப்படாத தொன்று என்றே கூறலாம். அதனால் குழந்தைகள் பெரும்பாலும் இன்பமாகவே, ஆடியும் பாடியும் களிப்புடன் பொழுது போக்குவதைக் காணலாம்,

குழவிப் பருவத்தைக் கடந்து வாலிப பருவத்தை அடையும் பொழுது வாழ்க்கைக்கு வேண்டிய தொழிலைப் பற்றிய கவலை, அது வழியாகப் பொருள் தேடுவது பற்றிய கவலை, வருகின்ற பொருளைக் கொண்டு குடும்பத்தை நடத்த வேண்டிய கவலை, இப்படிப் பல கவலைகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி விடுகின்றன.

" அன்ன விசாரம் அதுவே விசாரம்;
அதுவொழிந்தால்
சொன்ன விசாரம் தொலையா விசாரம்; நல்
தோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம்; இப்
பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம்வைத் தாய்இறை வாகச்சி
ஏகம்பனே "

என்கின்றார் பட்டினத்து அடிகள். இப்படிப்பட்ட கவலை ஒன்றும் குழந்தைகட்கு இல்லை. அதற்குக் காரணம், எல்லாக் கவலைகளையும் பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டு, குழந்தையை இன்பமாக வளர்ப்பதேயாகும். ஆகவே நன்றாக உண்பதும், தாலாட்டுப் பாட்டைக் கேட்டுக் கொண்டு தொட்டிலில் உறங்குவதுமே குழந்தையின் வேலையாகிறது. குடும்ப பாரத்தினால் அல்லலுறுகின்றவர்களுக்கு இக் குழந்தைப் பருவத்தை நினைத்தால், என்றுமே குழந்தையாய் இருக்கும் நிலை நமக்கு வாய்க்கக் கூடாதா என்றுகூட எண்ணத்தோன்றும். அவ்வாறிருப்பதற்குத் தாய் தந்தையரும் என்றும் உள்ளவர்களாய் இருக்கவேண்டுமன்றோ! தங்கள் தாய் தந்தையர் என்றும் உள்ளவர்களாகவும், தாங்கள் என்றுமே குழந்தைகளாகவும் இருக்கும் நிலை உலகில் எவருக்கேனும் இருத்தல் கூடுமோ? கூடாது என்பது தெளிவு. ஆயினும், உலகில் உள்ள எல்லோருமே என்றும் குழந்தைகளாய் இருக்க, அவர் தம் தாய் தந்தையரும் என்றும் உள்ளவராய் இருக்கும் நிலை உள்ளது. அதனை அறியாதிருப்பதுதான் குறை.

" அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக " என்று திருக்களிற்றுப்படியார் கூறுகின்றபடி, அம்மையாகிய சத்தியும், அப்பனாகிய சிவமுமே அனைவர்க்கும் தாய் தந்தையர். அவர் தம் குழந்தைகளே அனைத்துயிர்களும். ஆனால் இக் குழந்தைகள் தம் தாய்தந்தையரை அறிவதில்லை. அதனால் அல்லலுறுகின்றன. ஒரு கூட்டத்தில் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்த குழந்தைகள், அழுது அல்லல் உறுவது அனுபவத்தில் காணப்படுவதன்றோ?

உடலுக்குத் தாய்தந்தையர் இவ்வுலகத்தில் உள்ளனர். அவர்களை யாவரும் நன்கு அறிகின்றனர். ஆனால் உயிருக்குத் தாய் தந்தையராகிய சத்தியையும் சிவத்தையும் ஒருவரும் அறிவதில்லை. ஏனெனில் அவர்கள், உடலுக்குரிய தாய்தந்தை யரைப்போல ஊனக்கண்ணாற் காணத் தக்கவரல்லர்; ஞானக் கண்ணாலே காணத்தக்கவர்கள். அந்த ஞானக்கண்ணை, அறியாமையாகிய இருள் மறைத்து நிற்கின்றது.

"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல்
கட்டுண் டிருந்தஎமை"

என்கின்றார் தாயுமான அடிகள்.

ஆணவ இருள் நீங்கப்பெற்றால் ஞானக்கண் திறக்கும்; அம்மையப்பரைக் காணலாம்; அல்லல் நீங்கி இன்பத்துடன் வாழலாம். அந்த ஆணவ இருள் நீங்குவது எப்போது? ஆணவ இருள் நீங்கி அம்மையப்பரைக்கண்ட அனுபூதிமான் களது அருளுரைகளைக் கேட்டலும், அவ்வுரைகளின் வழி நிற்றலுமே அறியாமையாகிய அக இருள் நீங்குதற்குரிய வழி யாகும். அவர்கள் என்ன அருளிச்செய்கிறார்கள்?

"நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்; யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்; சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே"

என்றாற்போல, இறைவனை ஒருநாளில் ஒருபொழுதாயினும் மனம் நினைக்கவும் நா அவனது பெயரைச் சொல்லவும், செவி அவனது புகழைக் கேட்கவும், மற்றும் இன்னோரன்னவாகச் சரியைத் தொண்டு கிரியைத் தொண்டு என்பவைகளை இயன்ற அளவிற் செய்தலும் வேண்டும் என்கின்றார்கள்.

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்" என்றபடி, திருவைந்தெழுத்தே இறைவனது திருநாமம். அதனை நாள் தோறும் இயன்ற அளவில் ஓதுதல் வேண்டும். அது அக இருளைப் போக்கும் நல்ல விளக்காகும் என்பதை,

" இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே "

என்னும் அப்பர் அருள்வாக்கு விளக்குகின்றது.

" பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்;
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்;
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே "

என்ற அவரது வாக்கின் பொருளை உணர்ந்து, இறைவனைக் கைகளால் கடிமலர் தூவி வணங்கி, நாவினால் திருவைந் தெழுத்தை ஓதித் துதித்தால்,

" அஞ்செழுத்து மேஅம்மை அப்பர்தமைக் காட்டுதலால் "

என்றபடி, அஞ்ஞான இருள்நீங்கி ஞானக்கண் பெற்று அம்மையப்பரைக் காணலாம். அம்மையப்பரைக் கண்டுவிட்டால், அப்பால் அல்லல் ஒன்றும் இல்லை. அங்ஙனம் கண்ட அருளாளர்கள் தங்கட்கு, " இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை " என்கின்றார்கள்.

எங்கள் ஆதிபரமாசாரிய மூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞான சம்பந்தரும், எல்லா உலகங்கட்கும் தாயும் தந்தையு மாகிய அம்மையப்பரைக் கண்டமையால், அவர்களிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

பச்சிளங் குழந்தை தாய் தந்தையரைக் கண்டபோதிலும், அவர்களது அருமை பெருமைகளை அறிந்து அவர்களிடம் அன்பு கொள்ளுதல் இயலாது; அறியாமை காரணமாகத் தவறு செய்தலே அதன் இயற்கையாய் இருக்கும். அவ்வாறிருப்பினும் அதுபற்றித் தாய்தந்தையர் குழந்தையை வளர்க்காது விட்டு விடுவரோ! விடமாட்டார்கள். சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டித் தொட்டிலிலே இட்டுத் தாலாட்டி வளர்க்கவே செய்வார்கள். அதுபோலவே, அறிவிற்குத் தாய் தந்தையாராகிய நீங்கள்,

அறிவிலே ஞானத்திலே பச்சிளங் குழந்தையாய்க் கிடக்கின்ற என்னைப் பாதுகாத்து வளர்க்கவேண்டும் என்கிறார்கள்.

இறைவனிடத்திலே அன்பு வையாததற்குக் காரணம், அவனை அறியும் ஞானம் இல்லாமையேயாகும். ஆதலின், தம்மை அவர்கள், 'இறைவனது மெய்யடியார்கள்போலப் பேரன்பு உடையவன் அல்லேன்' என்று கூறிக்கொள்கிறார்கள். 'அன்பு' என்னும் நற்பண்பு இல்லாவிடினும் குற்றமாயினும் இல்லாதிருக்கின்றேனே எனில், அதுவுமில்லை என்பதற்கு 'பிழைசெய்யேன்தானல்லேன்' என்றும் தெரிவிக்கின்றார்கள்' அறிவிலே மிக இளையவராய் இருப்போர் பிழை செய்யாதிருத்தல் கூடுமோ! இவ்வாறு இருவகையிலும் தமது எளிய நிலையைத் தெரிவித்துக்கொண்ட அவர்கள், இறைவனிடம் அன்பில்லாத பொழுது வேறு எந்தவகை அன்பும் இல்லாதவர்களே என்னும் கருத்தினால், "ஓரன்பும் இல்லா உலுத்தனேன்" என்றார்கள்.

"ஈசனுக்கன் பில்லார் அடியவர்க்கன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்"

என்பது சிவஞானசித்தி. உலுத்தன் - பயனில்லாதவன். இவ்வாறு அவர்கள் தங்களைத் தாழ்வுபடுத்திக் கூறிக்கொள்வது.

"பணியுமாம் என்றும் பெருமை"

என்னும் அவர்களது சீரிய பண்பினையே காட்டுகின்றது.

இத்தன்மையேனாகிய என்னையும் பேரின்பத்தில் திளைக்கச் செய்தல்வேண்டும். பேரின்பத்திற்குக் காரணம் பேரன்பாதலின் அதனை அருளவேண்டும் என்பதற்கு, "பேரன்புகாட்டி" என்றதனை முதலிற்சொல்லியருளினார்கள்.

அன்பு தோன்றுதற்கு முதலில் அறிவு தோன்ற வேண்டும்; அதுவும் தன்னை முன்னே அறிந்து, பின்பு தலைவனை அறியும் அறிவு தோன்றவேண்டும் என்பதற்கு, "எனைக்காட்டி உனைக் காட்டி" என்றார்கள். என்னுடைய நிலையையும் உம்முடைய நிலையையும் உணர்த்திவிட்டால், நான் பிள்ளையும், நீவிர் பெற்றோருமாகிய நிலை விளங்கி, நான் என் செயலற்று இன்ப நிலையிலே இனிது இருப்பேன்; அந்நிலையை அருளவேண்டும் என்றற்கு, "இன்பத்தொட்டிலிலே ஆட்டிவளர் சொக்கநாதா"

என்று தங்கள் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானிடம் வேண்டிக்கொள்ளுகிறார்கள். எனவே, இன்பத் தொட்டிலாவது வீட்டுநிலை என்பதும், உயிர்கள் அத்தொட்டியில் அமர்ந்து கண்வளரும் குழவிகள் என்பதும், அக்குழவிகள் அந்த இன்பத் தொட்டிலிலே இட்டு ஆட்டி வளர்க்கின்ற தாய்தந்தையர் சத்தியும் சிவமும் என்பதும் நன்கு விளங்கும்.

முத்திநிலையாகிய இன்பத் தொட்டிலிலே இட்டு, சத்தி சிவமாகிய தாய் தந்தையாரால் தாலாட்டி வளர்க்கப்பெறும் நிலை யாவர்க்கும் வாய்க்கக்கூடியதே. அதற்கு வேண்டுவனவற்றை முன்னைய வெண்பாக்கள் சிலவற்றில் அவர்கள் குறிக்கின்றார்கள்.

எல்லாம் உனது உனதுபதம் (திருவடி), எல்லாம் உனது செயல்; எல்லாம் உனது அருளே என்று இறைவனையே பற்றி நின்றால் மா துயரம் நீங்கும்.

'சொக்கலிங்கப் பெருமான் பரதேசி காவலன்; தருமதுரை, எல்லாம் வல்ல சித்தன். ஆகையால், அவனையே தஞ்சமாக அடைந்து முறையிடல் வேண்டும். வேண்டினால், எல்லாவற்றையும் காட்டுபவனும், மறைப்பவனும் ஆகிய அவன், தன்னையே நமக்குக்காட்டுவான்; அப்பொழுது அவனை நாம் அனன்னியமாய் நின்று காணலாம்; அங்ஙனம் யான் அவனைக்கண்டேன்' என்று அவர்கள் அருளிச்செய்துள்ளார்கள். அத்தகைய அருள் வாக்குக்களை உண்மையுடன் ஊன்றி உணர்ந்தால், யாவரும் இன்பத் தொட்டிலிலே இன்பமுடன் அமர்ந்து வாழலாம்.

---


குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 2 — 25 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம்: நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

( மலர் 25, இதழ் 5, பக்கம் 188 இன் தொடர்ச்சி )

## பரப்பிரமம் உயிராகாமை

மாணுக்கன் : தூலமும், சூக்குமமும் ஆகிய உடம்புகளும் அவற்றின் பகுதிகளும், அவை அனைத்தும் கூடிய தொகுதியும் உயிரல்ல என்று தெரித்துக்காட்டிய பின்னரும், உயிரல்லாத வேறென்றை உயிர் என மயங்குதற்கு ஏது உண்டோ ?

ஆசிரியர் ; உண்டு. மேற்கூறியவாறு தூலதேகம் முதலிய வற்றை உயிர் என மயங்கும் மயக்கம் வேதத்திற்குப் புறம்பான மதத்தவரிடத்தன்றி, வேதமதத்தவர்பால் இல்லை. ஆனல், வேத மதத்தவருள் ஒருசாரார், 'பரப்பிரமம், பரம்பொருள்' என் றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுகின்ற கடவுட் பொருளையே உயிர் என்கின்றனர். அவர்கள் அத்துவிதிகளும், வேதாந்தி களும் தாங்கள்தாம் என்றும் சொல்லிக்கொள்கின்றனர். அவர் கள் தருக்கநூற் சொற்களைக் கொண்டு, வடமொழிச் சொற் சாலங்களால் ஆரவாரம்படப் பேசுதலைக் கண்டு மருளாதவர், தமிழருள்ளும் இல்லை எனலாம்.

மாணுக்கன் : ஆம் ! ஆம் !! தங்கள் முன்னிலையில் அடி யேன் அவர்களை மறந்தேவிட்டேன். அவர்களுடைய சாத்திரங் கள் தாமே, நாட்டில், 'உயர்ந்த சாத்திரங்கள்' எனப் போற்றப் பெறுகின்றன ! அவர்கள் தங்கள் கொள்கையை எங்ஙனம் விளக்குகின்றனர் ?

ஆசிரியர் : 'உயிர் என்று சொல்லப்படுவதும், பரப்பிரமம் என்று சொல்லப்படுவதும் அறிவுப்பொருள்களே' என்பது எல்லார்க்கும் உடன்பாடு. அறிவுப் பொருளை, ஒன்று என்னுது.

இரண்டு எனக் கொள்ளுதற்கு ஓர் காரணம் இல்லை. அதனல், அங்ஙனம் கொள்ளுதல், 'மிகை' என்னும் குற்றமாகும். ஆகவே, 'உயிர், பரப்பிரமம்' என்ற இரண்டனுள் ஒன்றே உண்மைப் பொருள் எனக் கொள்ளற்பாலது. வேதங்களில், எல்லாப் பொருள்களும் பரப்பிரமமே என்று கூறப்படுவதாலும், உயிர் நிலையில்லாதது என்பது அனுபவத்திற் காணப்படுவதாகலானும், பரப்பிரமத்தின் பிரதிபலிப்பே உயிர்; அதனையன்றி, உயிர் என்பதொரு பொருள் தனியாக இல்லை, என்று இவ்வாறு அவர்கள் தங்கள் கருத்தை வெளியிடுவர்.

மாணுக்கன் : அவர்கள் உரையைக் கேட்கும்பொழுது அடியேனுக்கும் சிறிது கலக்கம் உண்டாகின்றது; அதனைத் தெளிவித்தருளல் வேண்டும்.

ஆசிரியர் : உயிர் பரப்பிரமமேயாயின், அது பரப்பிரமம் போல, தானே தனித்து நின்று பொருள்களை அறியாது, மனம் முதலிய கருவிகளைத் துணைக்கொண்டே அறிவது ஏன் ? மனம் முதலிய கருவிகள் இல்லையேல் உயிருக்கு அறிவு நிகழாது என்பது, உறக்கத்தில் உயிர் அறிவின்றிக் கிடத்தலாலும், விழிப்பில் அறிவுடையதாய் இருத்தலாலும் அறியப்படுகின்றதன்றோ ?

மாணுக்கன் : அதனல் என்ன குற்றம் ! பரப்பிரமம் அறிவே வடிவானதாயினும் அறியாமையுட்பட்டதால். கருவிகளோடு கூடியே அறியும் நிலையை எய்திற்று என்போம்.

ஆசிரியர் : நல்லது ! 'பரப்பிரமம் அறியாமையுள் அகப்படுமோ' என்ற வினவை இப்பொழுது நாம் எழுப்பவில்லை. கருவிகளோடு கூடியபொழுது அறியாமை நீங்கி அறிவு விளங்கப் பெறுமாயின், தற்சொருபத்தை அறியாது ஐம்புல விடயங்களை மட்டுமே அறிவதும், தற்சொரூபத்தை, நல்லாசிரியர், தமது உபதேசத்தாலும், வேதம் முதலிய நூல்களாலும் அறிவித்த பின்பே அறிவதும் ஏன் ?

மாணுக்கன் : அதனுலும் வருவதொரு குற்றம் இல்லை. மனம் முதலிய கருவிகள் ஐம்புல விடயங்களைமட்டுமே அறிதற்குத் துணையாகும்; தற்சொரூபத்தை அறிதற்கு அவை துணையாகமாட்டா; அதற்கு நல்லாசிரியரது அருள் உபதேசமே துணையாவதாகும் என்போம்.

ஆசிரியர் : நல்லது! மனம் முதலியவை ஐம்புல விடயங்களை அறிதற்கும், நல்லாசிரியர் உரை தற்சொரூபத்தை அறிதற்கும் துணையாகுமாயின், அத்துணையைப்பெற்ற பொழுதும் எல்லாவற்றையும் ஒருங்கே அறிந்து அறிவாகியே நின்று விடாமல், ஒருபொருளை ஒருகாலத்திலும் மற்றொரு பொருளை மற்றொரு காலத்திலும் இவ்வாறு ஒவ்வொன்றாகவே அறிவதும், முன் அறிந்தவற்றைப் பின்னும் அறிந்து நில்லாது மறந்தும், அறிகின்ற பொருளையும் இடைவிடாது அறிதல் இன்றி, விட்டு விட்டு அறிந்தும் நிற்பது ஏன்?

மாணக்கன் : அதுவும் அறியாமையின் விளைவே; அவ்வறியாமை, மேற்கூறிய துணைப்பொருள்களால் முற்றிலும் நீங்காது, சிறிது சிறிதாகவே நீங்குதலின், இந்நிலைகள் உளவாகின்றன என்றல் கூடும்.

ஆசிரியர் : அங்ஙனம் கூறுதல் கூடாது. ஏனெனில் எல்லாப் பொருள்களையும் ஒரு காலத்திலே ஒருங்கே அறியமாட்டாமைக்குக் காரணம் அறியாமை என்னினும், அஃது ஒருவாறு பொருந்தும்; அவ்வாறன்றி, அறிகின்ற பொருளையே இடையீடின்றி அறியமாட்டாது விட்டுவிட்டு அறிதலும், முன் அறிந்ததைப் பின் அறியமாட்டாது விட்டொழிதலும் அறியாமையின் விளைவாகா. அஃது உயிர்களின் அறிவிற்கு இயற்கையாய் உள்ள தன்மையேயாம். ஆகவே, எல்லாப் பொருள்களையும் ஒரு காலத்திலே ஒருங்கே இடையீடின்றி அறிந்தாங்கறிந்து நிற்பது பரப்பிரமத்தின் தன்மையும், அவ்வாறன்றி மேற்கூறியவாறு அறிவது உயிரின் தன்மையுமாம் என்பது விளங்கும். இத்தன்மைகளே 'முற்றறிவு' என்றும், 'சிற்றறிவு' என்றும், சொல்லப்படுகின்றன. எனவே, சிற்றறிவாகிய உயிரை, முற்றறிவாகிய பரப்பிரமமே என்று சாதிக்கத் துணிதல் பொருந்தாமை அறிக.

இன்னும், பரப்பிரமத்தின் அறிவு எஞ்ஞான்றும் தனக்குப் பிறிதொரு துணைவேண்டாது தானே விளங்கி நிற்பதாகலின், 'அது - சொயம்பிரகாசம்' என்பதும், உயிரின் அறிவு அவ்வாறன்றி, எஞ்ஞான்றும் யாதாயினும் ஒரு துணையைக் கொண்டே விளங்குவதாகலின், 'அது வியஞ்சகப் பிரகாசம்' என்பதும் அறியற்பாலன. அதனல், வியஞ்சகப் பிரகாச அறிவாகிய உயிர், எவ்வாற்ருனும், சொயம்பிரகாச அறிவாகிய பரப்பிரமம் ஆமாறில்லை.

மற்றும், பரப்பிரமத்தின் அறிவு பிறிதொன்ருல் திரிபெய் தாது, எஞ்ஞான்றும் தன் தன்மையிலே நிற்பதாகலின், அது சுதந்திரமான அறிவு எனவும், உயிரின் அறிவு அவ்வாறன்றி, அடுத்தது காட்டும் பளிங்குபோல், அறியப்பட்ட பொருளின் தன்மையே தன் தன்மையாய்த் திரிந்து நிற்கும் இயல்புடைய தாகலின், அது பரதந்திரமான அறிவு எனவும் உணர்தல் வேண்டும். உணரவே, பரதந்திர அறிவான உயிர், எவ்வாற்ரு னும் சுதந்திர அறிவான பரப்பிரமம் ஆமாறில்லே.

சுதந்திரத் தன்மை இல்லாமையால் அறியாமையுட்படுவது உயிரேயன்றி, அத்தன்மையுடைய பரப்பிரமம் அன்று; ஆதலின், பரப்பிரமத்தை 'அறியாமையுட்பட்டது' என்றல் அசம்பாவித மாம். ஆகவே, பிரமான்மவாதிகள், தம்மைப்பிரமத்தை உணர்ந்த பிரமஞானிகள் என்று கூறிக்கொண்ட போதிலும், உண்மையில் அவர்கள் கூற்று உயிரின் தன்மையைப் பிரமத்தின் தன்மை என மயங்கிக் கூறும் கூற்றேயாம்.

'அறிவு' என்னும் பொதுத்தன்மையால், பரப்பிரமமும் உயிரும் ஒன்றே எனினும், முற்றறிவு – சிற்றறிவு, தானே விளங்கும் அறிவு – விளக்க விளங்கும் அறிவு, சுதந்திர அறிவு - பரதந்திர அறிவுஎன்னும் தனித்தன்மைகளால் இரண்டும் வேறு வேருகலின், இரண்டு அறிவு உண்டென்றல், 'மிகை' என்னும் குற்றமாதல் எவ்வாறு என்று உணர்ந்து, அவ்வாதத்தினை விட் டொழிதல் வேண்டும்.

எவ்வாருயினும் 'அறிவு' என்ற துணையானே பரப்பிரம மும், உயிரும் ஒருபொருளே என முரணிக் கூறின், 'குடம்' என்ற துணையானே பொற்குடம், மட்குடம் முதலியனவும், 'ஆடை' என்ற துணையானே பருத்தியாடை, பட்டாடை முதலியனவும் வேறுவேறு பொருள்கள் அல்ல; ஒருபொருளே எனல் வேண்டும். அது கூடாமையால், அவ்வாதம் பொருந்து வதன்ரும். இந்நேர்மாருன சிறப்பியல்களால், பரப்பிரமமும், உயிரும் பிம்பப்பிரதி பிம்பங்கள் ஆகாமையும் அறிந்துகொள் ளப்படும். 'இவ்வாற்ருல் பரப்பிரமமே உயிர்' என்பாரது கூற்றுச் சிறிதும் பொருந்தாமையறிக.

(தொடரும்)

# *நன்றியுரைப் பாமலர்

பூவாரும் புனற்பொன்னி நதியின் தென்பால்
பொலியுமயி லாடுதுறை பொற்பார் ஞாங்கர்
நாவாரும் புகழ்த்தருமை யாதீ னத்து
நண்ணுமிரு பத்தைந்தா நவிலு மேன்மைக்
கோவாரும் அருட்செங்கோற் கயிலை ஞான
குருமணிசுப் பிரமணிய குரவீர்! நுந்தந்
தேவாரும் பெருஞ்சீர்த்தி பலவும் இங்கிச்
சிறியேங்கள் தெரிந்துதுதி செயவல் லேமோ! 1

கயிலாய பரம்பரையென் றுரைக்கும் பண்டைக்
கவின்பெயர்தான் இன்றெவர்க்குங் கண்கூ டாகக்
கயிலாய யாத்திரையிற் கருத்தை யூன்றிக்
கடுமையவாம் இடரொன்றுங் கருதா தேகிக்
கயிலாயந் தனைச்சார்ந்து நேரே யன்பாற்
கண்ணுமன முங்களிப்பக் கண்டு போற்றிக்
கயிலாயத் திறையருள்பெற் றதனை டேனைக்
கதித்தலமுற் றுற்றதிறங் கழறற் பாற்றே! 2

திருநெறிய நற்றெய்வத் தமிழ்மன் றத்தால்
தீந்தமிழை வளர்த்திடுமச் செயலே யன்றிப்
பெருநெறியில் தமிழ்நடை ரியமும் ஓங்கப்
பெருகிடுநற் பல்கலைக்கல் லூரி தன்னை
வருநெறியில் நிறுவியுயர் சமய ஞானம்
வளர்வுறச்சித் தாந்தக்கல் லூரி யோடும்
ஒருநெறியில் புரந்துவரும் திருவுள் ளத்தில்
ஓங்கருளின் பெருமையினை உரைப்ப தென்னே! 3

இயம்பியஇக் கல்லூரி தன்னிற் சேர்ந்தே
இலக்கியங்கள் பலகற்றேம்; இலக்கி யத்தின்
நயம்பலவும் உணர்தற்காம் இலக்க ணங்கள்
நவையறவே கற்றுணர்ந்தோம்; ஞாலத் தின்று
பயன்தருபல் வரலாறு கல்வெட் டுக்கள்
படித்துணர்ந்தோம்; பேசுதற்கும் பழகி நின்றேம்;
உயர்வுறுநற் கவிபுனையும் ஆற்றல் பெற்றேம்
உறுமிடத்தின் தருமையின்சீர் ஓங்கச் செய்வோம். 4

திருவுளத்துக் கருணையினால் உண்டி ருந்தோம்;
செந்தமிழ்கற் றேம்;சமய சித்தாந் தங்கள்
வருமுறை யுற்றேம்;குருவோ டிறைவற் காற்றும்
வழிபாட்டில் ஈடுபட்டோம்; மறவோம்; எங்கள்
குருமணிநீர் நீடூழி வாழி யென்றே
கூர்ந்தமிகு நன்றியுளங் குளிர்ந்து வாழ்த்திப்
பெருகும்அருட் கண்ணோக்கி எங்கட் காசி
பெரிதும்வழங் கிடத்திருமுன் பணிகின் றேமே. 5

---

* தருமை ஆதீனக் கல்லூரி நிறைநிலை மாணவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் திருவடியிணைகளில் பணிவோடு அணிவித்தது. (13—2—66).

# அப்பரடிகள்

செஞ்சொற்கொண்டல்

**வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ.,**

மொழியியல்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

## நடையருப் பெருந்துறவு:

அப்பரடிகளைச் சிறப்பிக்க வந்த சிவஞான முனிவர் 'நடையருப் பெருந்துறவு' என்று அடிகள் மேற்கொண்ட துறவொழுக்கத்தைத் தொழுது போற்றுகின்ருர். அடிகள் 'ஐந்து புலன் களையும் வென்ற அருஞ்சிறப்பும், மெய்ஞ்ஞானம் பூத்த பொற்பும் உடையவர்' என்று வாயுசங்கிதை யாசிரியர் வரைகின்ருர். 'ஐம்புலன்களாகிய களைகளையெடுத்த அருந்தவர்' என்பர் ஐயாற்றுப் புராண ஆசிரியர்; 'மாற்றுதற் கரிய தவத்தோன்' என்பர் சீகாளத்திப் புராணம் உடையார்; 'மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை ஆகிய மூன்றையும் நீத்தவர்; மனப்பற்றை அறவே துறந்தவர்; கண் ஆசை சிவபிரான் திருக்காட்சிக்கும், கருத்து ஆசை அவன் திருவருட்கும் ஆக்கியவர்' என்பது ஆப்பனூர்ப்புராண ஆசிரியர் பாராட்டு. 'நிந்தையற்ற முழுத்துறவு உடைய பிரான்' என்பது உறையூர்ப் புராணம் உடையார் உண்மையுரை. 'வாகீசத் திருமுனி' என்றும், 'பார் பரவும் திருமுனிவர்' என்றும், 'பெருந்தவத் தொண்டர்' என்றும், 'திண்மை மெய்த்தவர்' என்றும், 'போத மாதவர்' என்றும், 'மன்னு மாதவர்' என்றும், 'எல்லையில் தவத்தோர்' என்றும், 'செய்தவத்தோர்' என்றும், 'அத்தனுர் திருவடிக்கீழ் நினைவு அகலா அன்புருகும் மெய்த் தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்' என்றும் சேக்கிழார் செந்தமிழாற் பாடுவர். இவையனைத்தும் அடிகள் கொண்டொழுகிய தவச்சிறப்பை உணர்த்துவனவாம்.* பற்றற்ற வாழ்வு வாழ்ந்த அருளாளர் அடிகள். அடிகளது தூய வாழ்வு தூய மனம், தூய சொல், தூய செயல்களை உடைய ஒளி உடையது.

---

* அப்பர் சுவாமிகள் புராணம் - சிவக்கவிமணியவர்கள் உரை - தருமையாதீனப் பதிப்பு, 1944, பக். 17-21.

## பயன்கருதாப் பத்தி :

அடிகள் கொண்டொழுகிய பத்தியும் பயன்கருதாப் பாங்கு உடையது ஆகும். உயர்ந்த நிலையில் உள்ள அத்தகு பத்தியை உலகிடைக் காணவும் கூடுமோ ? உண்மையான மெய்யடியார், வீடும் வேண்டா விழுப்பம் உடையார் என்று சேக்கிழார் பாடுவது உண்மையுரை யாகும். *

## பழுத்த அநுபவம் :

உலகப் பெருஞ்சமயங்களுள் ஒன்ருக விளங்கும் சைவ சித்தாந்தச் செந்நெறியில், காரைக்காலம்மையார், திருமூலர் ஆகிய அருளாளர்கட்குப்பின், அன்புநெறி வளர்க்க கி. பி. ஆரும் நூற்ருண்டில் தோன்றிய அப்பரடிகள் சைவ ஞாயிருகத் திகழ்ந்தார். சமண்சமய நெறிப்பட்ட மன்னனையும் மக்களையும் அப்பரடிகளுடைய இனிய, எளிய, ஆழ்ந்த தமிழ்ப் பாடல்கள் கவர்ந்தன. இறைவன் திருவருளையன்றி மற்று ஒன்றையும் கனவிலும் கருதாது, நாடு முழுமையும் தமிழ்க் கவிதைகளைப் பாடி நைந்துருகினுர் அடிகள். தாம் வாழ்வில் அடைந்த அநுபவங்களை அழகுறப் பாடலில் வடித்தார். உலக வாழ்வின் நிலையாமை, உடலின் பொய்ம்மை, அருள்வாழ்வின் நிலைபேறு, அதனை உயிர்கள் அடையவேண்டிய வகை, இறை, உயிர், உலகு ஆகிய முப்பொருள்களின் தொடர்புகள் முதலியவற்றை, மக்களுக்குப் புரிகின்ற எளிய பாடல் அமைப்பில் எடுத்து ஓதினுர். பல ஆண்டுகள், சற்றேறக்குறைய நாற்பதாண்டிற்குப் பிறகே அடிகளின் அருட்பாடல்கள் எழுந்தன என்று கொள்ள லாம். ஆங்காங்குக் காணப்பெறும் பல குறிப்புக்கள் கொண்டு, அடிகளது முதுமை இனிது புலனுகின்றது.

## கண்ணீரில் மலர்ந்த கவிதை :

அடிகளின் கண்ணீரில் மலர்ந்த அருட்கவிதைகள் அனைத் தும், அடிகளுடைய கனிந்த நெஞ்சை விளக்கும் - வெளிக் கொணரும் அருள் ஓவியங்களாய் விளங்குகின்றன. அவை, அடிகளுடைய உள்ளத்தின் கசிவை உணர்த்துவதுடன், ஓதுவோர் கேட்போருடைய மனப்புன்மைகளையும் கரைக்கும் மருந்தாக உள்ளன என்று கூறுதலும் மிகை. சிந்தனையில் இடையரு அன்பும், திருமேனியில் அசைவும், கட்டியிருக்கும்

* பெரியபுராணம் - 143, (சமாசப்பதிப்பு - 1950)

கந்தையும் கூட மிகை என்று கருதும் கருத்தும், தளர்ந்த கைகளில் உழவாரப் படையும்' கொண்ட அடிகள் திருவுருவத்தை எண்ணுங்கால், ‡ அவரது துறவுள்ளமும் தொண்டுள்ளமுமே நம் சிந்தையில் முந்துகின்றன.

---

‡ பெரியபுராணம் - 2173, (சமாசப்பதிப்பு - 1950)

## விசேஷ நாட்கள்

1966 மே 10உ முதல் ஜூன் 10உ முடிய

வைகாசி

| | | |
|---|---|---|
| 4 | பிரதோஷம் | |
| 6 | கழற்சிங்க நாயனார் திருநக்ஷத்திரம் | |
| 7 | வேளூர் மண்டலாபிஷேக கிருத்திகை | |
| 11 | நம்பியாண்டார் நம்பிகள் திருநக்ஷத்திரம் | |
| 12 | நமிநந்தியடிகள் | ,, |
| ,, | சேக்கிழார் | ,, |
| 13 | சோமாசிமாற நாயனார் | ,, |
| 15 | தருமை 24ஆவது குருமகாசந்நிதானம் குருபூஜை | |
| 18 | பிரதோஷம், தருமையில் உற்சவ ஆரம்பம் | |
| 22 | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநக்ஷத்திரம் | |
| ,, | முருகநாயனார் | ,, |
| ,, | திருநீலநக்கநாயனார் | ,, |
| ,, | திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் | ,, |
| 27 | ஸ்ரீலஸ்ரீ ஆதிகுருஞானசம்பந்தர் குருபூசை | |
| 28 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் பட்டணப்பிரவேசம் | |

# அமுதிற்குத் தமிழென்று பேர்

வித்துவான். திருமதி. ப. நீலா

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு' - ?

என்று வினவுவார் வள்ளுவப் பெருந்தகையார்.

'மரங்கொல் தச்சன் கைவல் சிருஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.' - புறம் - 206.

என்பது ஔவையாரின் அமுதமொழி. மரவேலை செய்கின்ற தச்சனுடைய சிறுவன் கையில் மழுவுங்கொண்டு மரங்கள் நிறைந்த கானகத்தில் கவலையின்றிச் செல்லுதல்போல, அறிவு என்ற அழியாச் செல்வம் படைத்த புலவர்களாகிய நாங்கள் எத்திசைக்கண் சென்றாலும் புரவலர்களால் எதிர்கொள்ளப் பெறுவோம் என்று அதியமான் நெடுமான் அஞ்சியிடம் அஞ்சாது கூறினர்.

'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேய மல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு'

என்பது எத்துணை உண்மையான கூற்று!

இத்துணைச் சிறப்பிற்குக் காரணமான கல்வியை இளமையிலே கற்றல் நன்று. கனியிருக்கக் காய் கவர்தல் என்பது போன்றும், கரும்பிருக்க இரும்பு கடித்து எய்த்தல் என்பது போன்றும் நல்லவை இருக்க அல்லவை தேறும் அவாவை ஒழிக்க வேண்டும் அறிவுடையார் பெருமை அளக்கவும் ஒல்லுமோ?

அறிவுடையார் எல்லாம் உடையார். எதிரதாக் காக்கும் அறிவு பெற்றோர்க்கு அதிரவருவதோர் நோயில்லை. அறிவுடையார் எல்லாம் உடையார் என்று போற்றப் பெறுவதற்கும்,

அறிவிலாதார் என்னுடையரேனும் இலர் என்று தூற்றப் பெறுவதற்கும் காரணம் என்னே ? பரிமேலழகர் நானூற்றுமுப்பதாம் குறளில் எழுதும் உரை நம் மனத்தில் இக்கேள்வியின் சரியான விடையென இடம்பெறுகின்றது.

"செல்வங்களெல்லாம் அறிவாற் படைக்கவும் காக்கவும் படுதலின் அஃதுடையாரை எல்லா முடையாரென்றும், அவையெல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்கும் - தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவி உடையாரன்மையின் அஃதிலாதாரை என்னுடையரேனும் இலர் என்றுங் கூறினர்."

அறிவுடையார் பேச்சினால் இன்பமே எழும் என்பது கீழ் வரும் கூற்றினால் நிச்சயப்படுகிறது.

'பணிவுடைமை இன்சொல் என்ற அணிகலன்களைப் பூண்டிருக்கின்ற தோழி தலைவனிடம் பலபடியாகத் தலைவியின் மெல்லியல்புகளை எல்லாம் கூறியும் தலைவன் விடாப்பிடியாகப் பொருள்தேட வேண்டிப் பிரியும் செயலிலே உறுதியாக நின்றான். தோழிக்கு என்ன செய்வது என்று சிறிதுபொழுது விளங்கவில்லை. சில வினாடிகள் சிந்தனையில் கழிய, தலைவனிடம் பேசத் தொடங்கினாள் :-

'பெரும ! பொருள் தேடச் செல்லும் உனக்கு நன்மை உண்டாகட்டும். செல்லும் நெறியும் சேம நெறியாகட்டும் ! செல்வமும் சிறந்து கிடைப்பதாகுக ! என்று பணிவுடன் வாழ்த்தினாள். தலைவனுக்குத் தோழியின் நிலை புரியவில்லை. முந்தைய வினாடிகளில் தன் கருத்தோடு முரணிநின்றவள், இப்பொழுது இணங்கிப் பேசும் விந்தைதான் என்னே என்று மூக்கின் உச்சியில் சுட்டுவிரல் சேர்த்து நின்றான். தன் கருத்துப் பற்றி அவளிடமே உசாவுதல் நலமென்று நெஞ்சுவரை வந்த கேள்வியை உதட்டிலே தாங்கி உருக்கொடுக்க முயன்ற நேரம்... தோழி தலைவனைக் கையமர்த்திவிட்டுத் தானே பேசத் தொடங்கினாள்.

ஐயா ! ஏது இவள் திடீரென்று மாறிவிட்டாளே என்று மயங்கி நிற்கிறீர்களா ! நம்மை விட்டுக் கணமும் பிரிய மனமில்லாதவர்கள் இப்படி நம்மை வழியனுப்பக் காரணந்தான் என்ன என்று சிந்திக்கிறீர்களா ? அப்படியெல்லாம் ஒன்றும்

இல்லை. தாங்கள் பொருள்தேடச் செல்லும் நாடு எதுவோ அங்கே தலைவி வந்து பிறந்திடுவாள். இந்த வழியில் தங்களைப் பிரியாது பின் தொடருவோம் என்றுதான் சொல்ல வந்தேன் - என்று கூறி முடித்தாள் தோழி.

தோழியின் அறிவுநலத்தோடு கூடிய நாவன்மையைத் தலைவன் எண்ணி வியந்து நின்றான். பின்பு செலவழுங்கினான் என்பதைச் சொல்லவா வேண்டும்!

தலைவன் பிரிந்தால் தலைவி இறந்துபடுவாள் என்பதனை எத்துணை நாகரிகமாகத் தோழி தெரிவிக்கின்றாள்: பாடல் இதுதான் —

"செல்லும் நெறியனைத்தும் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க — வெல்லும்
அடற்றேர் விடலை அகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்க வியாம்.

அறிவுடையோர் பேச்சில் இப்படித்தான் ஆழமான பொருள் இருக்கும். பேச்சில் மட்டுமல்ல; பாக்களிலும் கூட இந்தத் தன்மையே காணலாம். சான்றோர் கவிதைகள் பார்ப்பதற்கு எளிதுபோலத் தோன்றி நம்மை ஏமாற்றிவிடும். கோதாவரிநதி அப்படி வீரர்களை ஏமாற்றியதாம் - கம்பர் சொல்கிறார்.

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்.

கோதாய் (குற்றமாய்) விரியும் நம் வாழ்வையுங்கூடச் சான்றோர் காட்டிய வழி செப்பஞ்செய்யும்.

( விரியும் )

## வேளூர் தேவஸ்தானம் ( வைத்தீசுவரன்கோயில் )

# இலவச சித்த வைத்தியசாலை,

### மூலிகைத் தோட்டத்தில் பயிர்செய்துள்ள மூலிகைகளும் அதன் உபயோகங்களும்.

1. அரசு: குணம்: பட்டை-புண்களை ஆற்றும், விக்கல், சொரிசிரங்குகளைப் போக்கும், வாய்புண்களுக்கு, கொப்பளிக்க குணம் உண்டாகும், பித்தத்தையும், கபத்தையும் குறைக்கும்.

2. அமுக்கரா: (அஸ்வகந்தா) குணம்: இலை, விதை, கிழங்கு-கபம், வாதசூலை, வாதரோகம் கரப்பான், பாண்டு, சுரம், வீக்கம், ஆயாசம் இவைகளைப் போக்கி பசியுண்டாக்கும், பொதுவாக காசம் ஸ்வாசம், கடியம், விரணம், இவைகளைப் போக்கும். வாத கபங்களைக் குறைக்கும்.

3. அவுரி: குணம்: இலை, வேர், வாதசுரம், காமாலை, மாந்தம், சீதளம், சந்நிபாதம், கீல்வாதம், பாம்பு விஷம் இவைகளைப் போக்கும். உடல் பொன்னிறம் பெறும். வெண்குஷ்டம் மறையும்.

4. ஆவாரை: குணம்: இலை, பூ, பட்டை, விதை வேர், பிசின், சால பிறமேக மூத்திர ரோகங்களையும், ஆண்குறி எரிச்சலையும் போக்கும். வெகு மூத்திரம், வெள்ளை, உட்சூடு, விரணம், வாதகிரஹணி, அஸ்தி சுரம், தாகம் இவை போகும், மூத்திரத்திலுள்ள மது (Diabetes) குறையும். உயர்ந்த மூலிகை,

5. ஆடுதீண்டாப்பாளை; குணம் - குஷ்டம், பாம்பு, விஷம். நீங்கும். பிரசவ வேதனையைத் தூண்டும். கபத்தை முறிக்கும்,

6. இலைக்கள்ளி: குணம்: இலை, பால், வேர் - செங்கரப்பான், கருங்கரப்பான், சிரந்தி, காதுகுத்தல் இவைகள் நீங்கும். சிறு குழந்தைகளுக்கு உண்டாகும் கரப்பான் ரோகத்திற்கு இதன் இலையை வரகு வைக்கோலினால் வெதுப்பிச் சாறு பிழிந்து புகட்டலாம். சாற்றை வெதுப்பி காதில்விட காதுகுத்தல் போகும். சாறுடன் சிறிது உப்புசேர்த்து காய்ச்சி, கக்குவான், காமாலை, சூலை முதலிய நோய்களுக்கும் வழங்கலாம்.

7. ஊமத்தை : குணம் : இலை, பூ, காய், விதை - நாய்கடியுள்ள குழிரணம், வித்ருதிக்கட்டி, நஞ்சு திரிதோஷம் நீங்கும். இதன் புகையை முகருவதால் கஷ்டசுவாசம் நீங்கும். இலை சார்-1. (அ) 2 துளி காதில்விட காதுவலி தீரும். குஷ்டம், வியர்வை, தினவு, பித்தசுரம் தீரும். அளவு மீறினல் வாந்தியும் மயக்கமும் உண்டாகும். ஊமத்தை சாறு புண் புரை ஆருத புண், பிளவை துர்மாமிசம் இவைகளைப் போக்கும். பொன்னூமத்தை விதை நாள்பட்ட சிராணி, காப்பாதி சுரம், பித்தசுரம், விஷசுரம், அதிசாரம் முதலியன தீரும்,

8. எருக்கு : குணம் : இலை, பூ, பால், பட்டை, வேர் - எலி விஷம், குஷ்டம், கிருமிரோகம், கீல்வீக்கம், பாம்புவிஷம், மலக்கட்டு இவை போகும். இலையை கட்டிகளுக்கு வதக்கிப் போடலாம். குதி வாதத்திற்கு நல்லது. பட்டை - நாள்பட்ட கீல்வாதம், குஷ்டம், மேவிரணம், மேகப்படை, இரசவேக்காடு, நீர்க்கோவை, சந்நிபாதம், வாதநோய் தீரும். எருக்கம்பூச்சாறு அப்பிரகத்தை சுத்திசெய்யும், எருக்கம்பால், ஐவகை வலிகளும் மகாவாதம், எலி விஷம், குளிர்சுரம், இவைகளும் தீரும் வாதக்கட்டிகளைக் கரைக்கும். பல்நோய், பல்சொத்தை இவைகளுக்கு மேலே தொட்டு வைக்கலாம்.

9. கண்டங்கத்திரி : குணம் : கபத்தையும், வாதத்தையும் குறைக்கும். இதை வெதுப்பி வயிற்றுவலிக்கும், மலப்பூச்சி வெளிப்படவும் கொடுக்கலாம். சீரண சக்தியை உண்டாக்கும். வலப்பாட்டீரல் வியாதிக்கு இது முக்கிய மருந்து. பித்தம் வாதத்தையும் குறைக்கும்.

10. கரிசலாங்கண்ணி : குணம் : இதன் சாறு, இலை, வேர் பாம்புகடி விஷம், ஜலதோஷம், காதுவலி, யானைக்கால், மூத்திரத்தில் ரத்தம் வருதல் நீங்கும். இது பலவித தைலங்களில் சேரும், கபத்தை நீக்கும்.

11. கருவேலங்கொழுந்து : குணம் : இதைத் தயிரில் அறைத்துக் கொடுக்கில் பாஷாண வேகம் தீரும். இலையை வெதுப்பி கண்ணில் ஒற்றடம் கொடுக்க கண் சிகப்பு மாறும். பாலில் அரைத்துச் சாப்பிட்டால் வயிற்றுவலி போகும். கபத்தையும், பித்தத்தையும் குறைக்கும்.

12. கழற்சிக்கொடி : குணம் : இதனல் பீதவாதம், குலைக்கட்டி, பிரமேகம். பலவித குன்மம் உள் அழலை தீரும். அண்டவாதத்தைப் போக்கும். சுரவியாதிக்கு நல்லது. குன்மம்

போகும். இதன் வித்து அண்டவாதம், பக்க சூலை, குன்மம், வீக்கம் போகும். பசியுண்டாக்கும்.

13. கள்ளி : குணம் : கள்ளிப்பட்டை - நரம்பு சிலந்தி, கபவாத தொந்தம், சந்நிபாதம் போகும். கள்ளி இலைச்சாறு - வைக்கோலினல் வாட்டிப் பிழிய ரசம் வரும். இதைக் குழந்தைகளுக்கும் புகட்ட கக்குவான், காமாலை, கரப்பான், குன்மம், பெருவிரணம் தீரும். பெரியவர்களுக்கு மலமந்தம், அஜீர்ணம், வாத தோடம் நீங்கும். சதுரக் கள்ளிப்பால் - குஷ்டம், கணுக்கடி, சூலைவாத குன்மம், வாத நோய், வாதப்பிரமேகம் பாலுண்ணி முதலிய சரும வியாதிகள் தீரும். மூட்டு வீக்கங்கள், கரையும். பேதியாகும். திருகுக்கள்ளிப்பால் - கஞ்சவாதம், கிரந்தி, பெருவியாதி, சீதக்கட்டு, கிருமிரோகம், பக்க சூலை தீரும், தேள் கொட்டிய வாயிலிட வேதனை அடங்கும். கொடிக்கள்ளி - கீல் வாயு, முடக்கு வாயு, வெண்குஷ்டம் போகும்.

14. கற்ருழை : குணம் : ஓர் கல்பமூலி. இது மூலம் உள் சூடு, பிறமேகம், கர்ப்பசூலை போகும். கற்பமுறை:- இதை ஹஸ்த நட்சத்திரத்திலும் கூடிய சாதக நாளில் ஜாடரக்கினி பலத்தை அனுசரித்து காலையில் கற்ருழையின் சோற்றை தேன், நெய் திரி கடுகு, சூரணம் சேர்த்துச் சாப்பிட்டு வர எவ்வித ரோகங்களும் ஒரே மாதத்தில் நீங்கும், அல்லது இதன் ரசத்தைப் பிழிந்து தேன், நெய், திரி கடுகு, சூரணம் சேர்த்து வேக வைத்துச் சாப்பிட்டுப் பாலன்னம் அருந்தி வர ஒரு மாதத்தில் சகல வியாதிகளும் நீங்கும்.

15. குப்பை மேனி : குணம் : நன்ருக பேதியாகும், மலக் கிருமியை வெளிப்படுத்தும், இருமலைத் தணித்துக் கோழையை வெளிப்படுத்தும், வாதவலி, தலைவலியை நீக்கும். கப அடைப்பு (Diphtheria) வியாதிக்கு இதன் சாரை உள்ளுக்கு கொடுக்க க்ஷண நேரத்தில் தொண்டையில் அடைக்கும் கபத்தைக் கரைக்கும்.

16. சிற்றரத்தை : குணம் : நெஞ்சிற்கோழை, ஈளை இருமல், சீதளம், கரப்பான், மார்புநோய், மூலம், தந்தநோய், வீக்கம், வலி, நடுக்கம், உதரம் இவைகள் தீரும். வாதம் கபம் குறைக்கும்,

17. சீந்தில்கொடி : குணம் : இதனல் சர்வமேகம், ரத்த பித்த ரோகம், அதிசாரம், மாந்தம், பித்தகணம், அம்லபித்தம், சர்ப்பவிஷம், தீரும் - ஜாடராக்கினி விருத்தியாகும். நீரிழிவு, க்ஷயம். காயசித்தி உண்டாக்கும். சீந்தில் சர்க்கரை மண்ணீரல்

விக்கம், காமாலே, இருமல், மூர்ச்சை வாந்தி, கப கட்டு, மூத்திரப்பை தாபிதம் இதுகளுக்கு நல்லது. சுரத்தினுல் ஏற்படும் பலகீனத்தைப் போக்கும்.

**சீந்தல் காயகற்பம் ;**

(1) நன்ருக முற்றின சீந்தில் தண்டு பலம் 100, நெய்» தேன், குழவுசீனி வகைக்கு பலம் 50, சேர்த்து தானிய புடம் வைத்து, பிறகு ¼ பலம் அளவு காலே, மாலே 1 வருடம் சாப்பிட்டால் சகல வியாதியும் போகும். தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நரை திரை மாறும்.

(2) சீந்தில் கொடி 25 பலம், சர்க்கரை 50 பலம், மூங்கிலுப்பு, பூனேக்காலி விதை, அமுக்கிராங்கிழங்கு, மூக்கரட்டை வேர், நெய் வகைக்கு பலம் 10, திராக்ஷை பலம் 8 இவைகளே இடித்து கலந்து பானேயிலிட்டு 40 நாள் தான்ய புடம் வைத்து எடுத்துத் தினம் 1 பலம் அளவு சாப்பிட காயசித்தி ஏற்படும்.

18. **தண்ணீர்விட்டான் :** குணம் : தேக வெப்பத்தைத் தீர்த்து வெள்ளேயை நிறுத்தும், தாதுபுஷ்டியைத் தரும், பித்தசூலே நீங்கும். இதன் கிழங்கு - நீரிழிவு, நாட்பட்ட சுரம், எலும்புருக்கி நோய், வெட்டை, ரத்தபித்தம் இவைகளுக்கு நல்லது. பலம் தரக்கூடியது.

19. **தும்பை :** குணம் : சர்ப்ப விஷம், வாதநோய், தலேவலி, கபதோஷம், சிலேத்மஜன்னி, பிரமேகம், நேத்திரம் புகைச்சல், அக்கினிமாந்தம், சோம்பல் தீரும். கபத்தையும் வாதத்தையும் நீக்கும்.

20. **கவிழ்தும்பை :** குணம் : இது ரத்தக்கடுப்பு, மூலம் போகும். இதன் சமூலம் சுத்தம்செய்து நிழலில் உலர்த்தி சரி பங்கு கடுக்காய் தூள் சேர்த்து காலே, மாலே வென்னீருடன் சாப்பிட்டால் மூலவியாதி போகும்.

21. **துளசி :** குணம் : கபம், வயிற்றுளேச்சல், அஸ்தி சுரம், தாகம், சுரமாந்தம், அரோசகம் போகும். வெப்பத்தைத் தரும், இருமல் இரைப்பு, கோழை, மார்சளி, சன்னிபாதசுரம், இவைகளே நீக்கும், கபத்தையும் வாதத்தையும் குறைத்து பித்தத்தையும், அதிகரிக்கும்.

22. **கருந்துளசி :** குணம் : இருமல், கிருமி. சலதோஷம், சன்னி, சுவாச காசம், மார்புச்சளி, இவைகள் போகும்.

( தொடரும் )

# வேலூர் தேவஸ்தானம் இந்து அனுதைக் குழந்தைகள் விடுதி

# பதின்மூன்ருவது ஆண்டு நிறைவு அறிக்கை

## சிறப்பு

தென்னுட்டில் மகிமை நிறைந்த பல தலங்கள் உள்ளன. அதில் எல்லாவித சிறப்பும், மகிமையும் பெற்று அருள் நிறைந்து விளங்கும் தலம் வைத்தியனுதன் கோவில். வைத்திய—நாதன் ஆகையால் தன்னை அடைந்தவர்களின் வியாதியை நீக்க மண் மருந்து கொண்டுள்ளார். அம்மை தைல பாத்திரம் ஏந்தி எதிர்நோக்கி நிற்கிருள் தன்னடியார்களுக்காக. மருந்தோ மண். மகிமையோ அடியார்மேல் தீவினை நோய் வாராமே, தீவினைக்கு மருந்தாகவும், மந்திரமும், தந்திரமும், மண் மருந்துமாகி, தீராநோய் தீர்த்தருளுபவனுகவும் நிற்பவன். உலகத்திற்கு அப்பனுகிய வைத்தியனுதன் "உள்ளமுள்கி யுகந்து" அப்பனே என்பார்க்கு, மெல்லவுள்க, வினைகெடும். இத்தலத்தின் மகிமை, அம்மை, அப்பனின் அருள் மகிமையை நாவுக்கரசர். சம்பந்தர். பாடல்களால் உணரலாம். செல்வமுத்துக்குமரனின் அருளை குமரகுருபரர் பாடல்களாலும் தருமபுர ஆதீனத்தின் 10ஆவது மகாசந்நிதானம் சிவஞானதேசிக சுவாமிகளின் அருட் பாடல்களாலும் அறியலாம். வைத்தியனுதன், தையல்நாயகி, செல்வமுத்துக்குமாரசுவாமி இவர்களின் அளவற்ற அருள் மகிமையோடு, ஸ்தலம் தீர்த்தம் சிறப்புற்று விளங்குகிறது. பல அன்பர்களும், பக்தர்களும் அருள்பெற்றும், தீரா நோய்களும், கர்ம நோய்களும், அம்மை, அப்பன் அருளால் நீங்கப்பெற்று. அவர்கள் விரும்பிய வரங்களும் கிடைக்கப்பெற்று, நம்பிவந்தவர்கள் நலம் பெற்று, எண்ணங்கள் ஈடேறிய மனமகிழ்ச்சியோடு தரிசித்து, காணிக்கை செலுத்திச் செல்வதையும் இன்றும் காணலாம். கிருத்திகை நட்சத்திர நாட்களில் நடக்கும் அபிஷேக, அலங்கார, ஆராதனைகளும், பக்தி இல்லா உள்ளத்தையும் பக்தியை ஊட்டி வலிய ஆட்கொள்ளும். இதனை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு தரிசித்து பயன் பெறுகிருர்கள். காலம் கடத்தாது நடத்தும் காலங்களும் - கோயிலின் சுத்தம் - சுத்தத்தாலும் கலைத்திறனுலும், கவர்ச்சி நிறைந்து பக்தியை வலிய ஊட்டவும், கூடியவாறு அமைந்துள்ளது. கோயிலின் சிறப்புக்கு நடத்துபவர்களின் பரந்த அன்பு உள்ளத்தின் பக்தியே காரணமாகும். தானும் தெய்வத்தொண்டு செய்து, மக்களும் பக்தி மார்க்கத்தில் செல்ல வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டவர்கள். அம்மை, அப்பனையும், செல்வனையும், அபிஷேகித்து. அலங்கரித்து ஆராதித்து. அவன் பாக்களையும் உள்ளம் உருகப் பாடச்செய்து, தானும் உள்ளம் உருகி நின்று தரிசிப்பதுடன், மற்றவர்களுக்கும் அப்பாக்கியத்தை அளிப்பவர்கள்.

கயிலை சென்று அவன் அருள் பெற்றவர்கள். தெய்வத் தொண்டே, சைவத்தொண்டாகக் கருதி நிற்பவர்கள், தருமபுர ஆதீனத்தின் 25 ஆவது வழித்தோன்றலாகி சைவம் தழைக்கத் தோன்றிய குருமகாசந்நிதானம் அவர்களின் நிர்வாகத்தில் இக் கோயில் இருப்பது வந்து தரிசிக்கும் அன்பர்களின் பாக்கியம் ஆகும். ஆதீன நிர்வாகத்தில் உள்ளது 27 தேவஸ்தானங்கள். அக்கோயில்களில் வைத்தியநாதன் கோவில் ஒன்ருக இருப்பதா லும், மற்ற கோயில்களைவிட இக்கோயில் எல்லா விதத்திலும் சிறப்புற்று விளங்குகிறது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் செல்வமுத்துக்குமரனிடம்கொண்ட அளவற்ற அன்பா லும், அதிக சிறப்பு ஏற்பட்டு இருக்கலாமல்லவா ?

## நோக்கமும் - தோடக்கமும்

சிறப்புப்பெற்ற இத்தலத்தின் செல்வத்தால், சைவம் தழைக்க பல அறங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் வைத்தீஸ்வரன்கோயில் கீழரதவீதியில் அனுதை விடுதி தொடங் கப்பட்டது. ஏங்கிய உள்ளத்தின் ஏக்கம் நீங்கவும், வாடிய உடலுக்கு உணவூட்டி வாட்டம் நீக்கவும், இருக்க இடம் அளித்து - எதிர்கால வாழ்வுக்கு "தன்கையே தனக்குதவி" என்று அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய வழிகாட்டவும், இவ்விடுதி உருவாகியது. தாய், தந்தையற்று, உறவினர் களின் உதவியற்று எங்களுக்கும் இவ்வுலகில் வாழ வழி உண்டா? உண்ண உணவுண்டா? எங்களுக்கு ஆதரவு அளிக்க யாருமில்லையா? தாய், தந்தையற்ற எங்களுக்கு, தாய் அன்பு கிடைக்குமா? என்று ஏங்கிச் சோர்ந்து நிற்கும் வாடிய வதனத்தைக்கொண்ட ஏழைச் சிறுவர்களைக்கண்டு ஸ்ரீலஸ்ரீ மகா சநநிதானத்தின் அன்புள்ளம் இளகியது. அவர்களுக்கு வாழ் வளித்து நல்வாழ்வு வாழ வழிகாட்ட வேண்டுமென்ற திருவுளங் கொண்டார்கள். "பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது." என்ற தெய்வப் புலவரின் பாடலுக்கு ஏற்ப பயனைக்கருதாது உதவி செய்தால்மட்டும் போதாது. அன்பு காட்டியும், இருக்க இடமளித்தும், மற்ற தேவைகளுடன், தெய்வ பக்தியும், நல்லறிவும், கல்வியும், அளித்து, எதிர்காலம் அவர் களுக்கு நன்ருக அமையவேண்டுமென்று திருவுளம் பற்றினர் கள். தீர்மானம் செயல்படுத்தப்பட்டது, திக்கற்றவர்கள் என்ருல் பெயரைக்கண்டு ஆதரவு இருந்தும் யாருமில்லையே என்று ஏங்குவார்கள்; ஏழையென்ருல் நாம் வசதியோடு இருந்தும் ஏழையா? என்ற வேதனை குழந்தைகள் உள்ளத்தில் ஏற்படக் கூடாது என்று திருவுள்ளத்திற்கொண்டு ஏழைகள் விடுதி, திக்கற்ற வர்கள் விடுதி என்ற பெயரைச் சூட்டினர்கள். என்னே! அம்மை யின், அன்பரின் இரக்கவுள்ளம். குழைந்தைகளுக்கு எல்லா வசதியும் செய்ததுடன் அவர்கள், உள்ளத்தில் ஏக்கம் ஏற்படாம

விருக்க இப்பெயரைச் சூட்டினுர்கள் போலும். ஆம்! அனுதைக் குழந்தைகள் என்பது, அகிலத்து நாயகி தையலம்மையின் குழந்தைகள் என்று, நமக்கு புலப்படுகிறதல்லவா! அ - அகிலம்; நா - நாயகி; தை - தையலம்மையின் குழந்தைகள் என்ற கருத்தோடு, 1953-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 7-ந் தேதி இந்து அனுதைக் குழந்தைகள் விடுதி, அன்றைய அறநிலைய அமைச்சர் வேங்கடசாமி நாயுடு அவர்களால், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் ஆசியோடு 7 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப் பட்டு வருடம் பதின்மூன்று முடிந்து 14-ஆவது ஆண்டு தொடங்குகின்றது.

### வளர்ச்சி

இவ்விடுதிக் குழந்தைகளின் எண்ணிக்கை 1953-ல் 7 ஆக இருந்து, 54-ல் 27 ஆக ஆயிற்று, எதிர்கால வாழ்வுக்கு வேண்டிய கல்வியும், மனப்பக்குவத்திற்கு வேண்டிய தெய்வப் பாடல்களும், உடல் வலிமைக்கு வேண்டிய தோட்டப் பயிற்சியும் கற்பிக்கப் பட்டு வந்தன. இதில் நால்வர் வயது வரம்புமீறி விட்டது என்பதால் விடுதியிலிருந்து விலக்கப்பட்டார்கள். 1955-ல் குழந்தைகளின் எண்ணிக்கை 23 ஆகவே இருந்தது. 1956-ல் குழந்தைகளின் எண்ணிக்கை 33. அவ்வருடம் விடுதியில் கலை மகள் விழாவும், குழந்தைகள் தினமும், கலா நிகழ்ச்சியோடு கொண்டாடப்பட்டது. 1957-ல் குழந்தைகளின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்தது. மூவரின் வயது வரம்புமீறி விட்டதாலும், அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்ட தாலும், அனுப்பப்பட்டார்கள். இன்று மூவரில் ஒருவர் மத்திய பிரதேசத்தில் பிலாஸ்பூரில், அமெரிக்கன் கம்பெனி, கார்பா பவர் கௌஸில், சூப்பர் வைசராக இருக்கிறுர். இவர் மெட்ரிகுலே ஷன் முடித்தவன். மற்றுமொருவர் டிரைவராகவும், ஒருவர் தருமபுர ஆதீனத்தில் தேவாரப் பயிற்சிபெற்று தேவார ஆசிரிய ராகவும் பணியாற்றுகிறுர். இவ்வருடத்தில் சீர்காழி சியாமளா பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை தலைமையில் விடுதியின் ஆண்டுவிழா, குழந்தைகளின் கலா நிகழ்ச்சியோடு "காரைக்காலம்மையார்" நாடகத்தோடும் நடத்தப்பட்டது.

குழந்தைகளின் திறமைக்குத் தக்கவாறு பரிசுகளும் வழங்கப் பட்டன. கலைமகள் விழாவும், குழந்தைகள் தினமும் கொண்டா டப்பட்டன. 56, 57 வருடங்களில் தருமபுர ஆதீன விழாக்களில் நாடகம், நாட்டியத்தில் பங்குகொண்டு திறமையாக நடித்து பரிசும் பெற்றுர்கள். 58-ல் 7 பேர் விலக்கப்பட்டனர். இன்று இவர்களில் ஒரு பெண் கலாக்ஷேத்ராவில் மெட்ரிகுலேஷன் முடித்து, பரதநாட்டியப் பயிற்சியும்பெற்று டிப்ளமா வாங்கி, காந்தி கிராமத்தில் உள்ள கலாபவனத்தில் நாட்டிய ஆசிரியராக

பணியாற்றுகிறுள். ஒருவர் சென்னையில் அச்சகத்தில் அச்சு கோற்பவராக (கம்பாஸிட்டராக) பணியாற்றுகிறுர். ஒருவர் இன்ஜினியராக பணியாற்றுகிறுர். ஒருவர் பள்ளி இறுதித் தேர்வு எழுதி ஆசிரியர் பயிற்சி பெறுகிறுர். விடுதியில் அம்பர் சர்க்கா, கிசான் ராட்டை 27—5—1958 ல் வேதாரண்யம். வேத ரத்தினம் பிள்ளை அவர்களால் தொடங்கப்பட்டது. அவர்கள் தலைமையில் அவ்வருட ஆண்டுவிழாவும், குழந்தைகள் கலா நிகழ்ச்சியோடு சிறப்பாக நடத்தப்பட்டது. குழந்தைகளின் சிறந்த செயல்களுக்குத் தகுந்தவாறு பரிசுகளும்வழங்கப்பட்டன.

குழந்தைகளின் வயது விடுதியின் விதிப்படி 15 என்று அனுப்பப்படுகிறது. அதனுல் அவர்கள் கல்வி பூர்ணமாக்கப் படாததாலும், கல்வியில் நாட்டம் அதிகம் இல்லாதவர்களுக்காக வும், கைத்தொழில் கற்றுப் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத் தோடு, 27-6—58ல் குடிசைத் தொழிலாகிய தறி, செக்கு இவை அந்நாள் அறநிலைய அமைச்சர் கனம் பக்தவச்சலம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டன. முன்பு ஆரம்பித்த அம்பர், கிசான், கல்வி யறிவு போதாத குழந்தைகளின் எதிர்கால வாழ்வுக்கு இத் தொழில் கல்வி போதாது. குழந்தைகள் பிறர் உதவி நாடாமல் நல்வாழ்வைத் தொடங்கவேண்டுமென்ற கருணை உள்ளத்தால் தொடக்கமானது. 1959-ல் 2 பேர் விலக்கப்பட்டனர். அவ் வருடம் கலைமகள் விழா கொண்டாடப்பட்டது.

1960-ல் 5 பேர் விலக்கப்பட்டனர். ஒருவர் பள்ளி இறுதித் தேர்வு முடித்து கிராம சேவிகா பயிற்சிபெற்று வருகிறுர். குழந்தைகளுடைய வயதுக்கு மீறிய கைத்தொழிலாக இருப்ப தால், அவர்கள் கற்க சிரமப்பட்டனர். பெரியவர்களாக இருப்ப வர்கள் விடுதியின் விதிப்படி அனுப்பப்பட்டனர். அதனுல் அத் தொழில்களில் நஷ்டம் ஏற்படவே நிறுத்தப்பட்டன. கிசான் ராட்டையில் மட்டும் அவர்கள் நூற்று சிட்டங்களாக்கி கதர் கடையில் கொடுத்து தங்களுக்கு வேண்டிய உடைகளைத் தயார் செய்து கொள்கிறுர்கள். இதில் லாபமும் கிடைக்கிறது. 1961ல் 4 பேர் விலக்கப்பட்டனர். ஒருவர் மில்லில் கணக்கராக இருக் கிறுர். மற்றொருவர் வடலூரில் வள்ளலார் நிலையத்தில் படித்து வருகிறுர். இன்னுமொருவர் தஞ்சை கரந்தையில் தமிழ் படித்து வருகிறுர். இவ்வருடமும் குழந்தைகள் சேர்க்கப்பட வில்லை. 40 குழந்தைகளுக்கு வேண்டிய செலவு 30 பேர்களுக்கு ஆனதாலும் மேற்கொண்டு சேர்ப்பதற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்ததால் சேர்க்கபடவில்லை. சாமன்களின் விலைகள் அதிகமாக இருந்ததே மற்ருெரு காரணமாகும். தேவார ஆசிரியர் பயிற்சிக்குப் பையன்கள் தேவைப்பட்டதால், தருமபுர ஆதீனத் தேவார பாடசாலைக்கு விடுதியிலிருந்து 7பையன்கள் அனுப்பப் பட்டனர். அவ்வருடம் கலைமகள் விழா விடுதியில் கொண்டாடப்

பட்டது. 1963-லும் கலைமகள் விழா கொண்டாடப்பட்டது. அவ்வருடம் 3-பேர் வயதாகி விட்டதால் அனுப்பப்பட்டனர். 1961ல்குழந்தைகளின் ஆரோக்கியத்தை முன்னிட்டு நல்ல தயிர், நெய்யாக சாப்பிட வேண்டுமென்று எருமை மாடு ஒன்று வாங்கப் பட்டது. இவ்வருடமும் கலைமகள் விழா கொண்டாடப் பட்டது பள்ளி இறுதித் தேர்வு எழுதி நல்ல மார்க்குடன் வெற்றிபெற்ற ராமதாஸ் என்னும் பையன் விடுதியிலிருந்து விலக்கப்பட்டு மன்னம்பந்தல் காலேஜில் படித்து வருகிறான். பெண் ஒருத்தியும் அவள் சுற்றத்தாரிடம் அனுப்பப்பட்டாள். 1965ல் ஐவர் அனுப்பப்பட்டனர். அதில் ஒருவன் பள்ளி இறுதி தேர்வு எழுதி நல்ல மார்க்குடன் வெற்றி பெற்று வேலூர் தேவஸ்தானத்தில் குமாஸ்தா வேலை பார்க்கிறான். மற்ற மூவரும் உறவினரிடமும் அனுப்பப்பட்டு படித்து வருகிறார்கள். கமலா என்னும் பெண்ணுக்கு யாரும் ஆதரவு இல்லாததால் காந்தி கிராமத்தில் சேர்க்கப்பட்டுப் படித்து வருகிறாள். மற்றும் விடுதியில் உள்ளவர்கள் உயர்தரப் பள்ளியிலும், ஆரம்ப பாடசாலையிலும் கல்வி பயன்று வருகிறார்கள். இவ்வருடத்தில் கலைமள் விழா குழந்தைகள் கலாநிகழ்ச்சியோடு 9-நாட்களும் கொண்டாடப்பட்டது.

தீபாவளிக்குப் புது உடைகளும், பலகாரமும் சரோஜனி வரதப்பன் அவர்களால் வழங்கப்பட்டன. இந்துமதப் பண்டிகைகள் அனைத்தும் குழந்தைகள் விருப்பப்படி சிறப்பாக நடத்தப் படுகின்றன. அதில் மிக விசேஷமாக கொண்டாடப்படுவது. நவராத்திரி, கொலு வைக்கப்பட்டு குழந்தைகளால் செய்யப்பட்ட கைவேலைகளைக்கொண்டு கண்காட்சி வைத்து கலா நிகழ்ச்சியோடு நடத்தப்படும். இவைகளுடன் பஜனையும் பூஜையும்சிறப்பாக நடத்தப்படுவதைப் பலர் வந்து பார்த்து, குழந்தைகளின் கைத்திறனையும். கலைத்திறனையும் கண்டு புகழ்ந்து செல்வார்கள். வெளிப்பழக்கம் வேண்டும் என்பதால் மனத்திற்கு மாறுதல் மகிழ்ச்சி ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தால் அவர்களைப் பல ஊர்களுக்கு உல்லாசப் பயணமாக அழைத்துச் செல்லப்படுகிறது. சென்ற இடத்தின் வரலாறுகளும் போதிக்கப்படுகிறது. அவர்கள் சென்ற ஊர்களில் முக்கிய மானவை சிதம்பரம் சீர்காழி திருப்புன்கூர், குருமாணக்குடி மாயூரம் தருமபுரம், சுவாமிமலை, திருவிடைமருதூர், திருபுவனம், தஞ்சாவூர் முதலியன. தருமபுர விழா நாட்களில் நாட்டியம் நாடகத்தில் அடிக்கடி பங்கு கொண்டு பரிசும் பெறுகிறார்கள். குழந்தைகளின் பள்ளி லீவு நாட்களில் தெய்வப் பாடல்களும் சொல்லிக் கொடுக்கப்படுவதுடன் நாயன்மார்கள் (பெரியபுராணம் திருவிளையாடற்புராணம்) சரிதமும், கந்தபுராணம், ராமாயணமும் சொல்லிக் கொடுக்கபட்டுகின்றன.

(தொடரும்)

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுலைப்பால் திருவிழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்கள்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்
திருமுலைப்பால் திருவிழா.



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்,
இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கட்கு
"திருமுறைக்கலாநிதி" என்ற பட்டம் வழங்கிப் பொன்னுடைபோர்த்துதல்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுலைப்பால் திருவிழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களால்
"திருமுறைக்கலாநிதி" என்ற பட்டம் வழங்கப்பெற்ற
திரு. M. M. தண்டபாணிதேசிகர் திருமுறை பாடுதல்.

# சீகாழியில் திருமுறை மாநாடு

தருமையாதீனம் சீகாழி ஸ்ரீ சட்டநாத சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற பிரமோத்சவத்தை யொட்டி 24—4—66 ஞாயிறு முதல் 30—4—66 சனிக்கிழமைமுடிய திருஞானசம்பந்தர் ஆலயத்தில் திருமுறை மாநாடு நடைபெற்றது. நாகை அற நிலயத்துறை உதவி ஆணையர் திரு. R. அர்ச்சுனன் B, A. அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள்.

24—4—66 ஞாயிறு மாலை 4 மணிக்கு தேவார பாராயணத்துடன் திருமுறை ஊர்வலம் நடைபெற்றது. மாலை 6-மணி. திருஞானசம்பந்தர் திருநாள். சீகாழி தேவஸ்தானம் தேவார இசைமணி திரு. S. திருஞானசம்பந்தம் கடவுள் வணக்கம் ஓதினார். சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்வரவேற்புரை நிகழ்த்தினார்கள். சீகாழி பெருநிலக்கிழார் திரு. S. சுப்பராய முதலியார் தலைமையில் தருமபுரம் வித்துவான் திரு. சி. அருணை வடிவேலு முதலியார், சிதம்பரம் வித்துவான் திரு S. சேது சுப்பிரமணியபிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

25—4—66 திங்கள் மாலை 6மணி. திருநாவுக்கரசர்திருநாள். திருபுவனம் தேவஸ்தானம் தேவார இசைமணி, திரு. R. சிவப்பிரகாசம், கடவுள்வணக்கம் ஓதினார். திருநள்ளாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள். சீகாழி வழக்கறிஞர் திரு. V. சுவேதாரண்ய ஐயர் பி. ஏ., பி. எல்., தலைமையில் மாநாடு தொடங்கியது. திருவையாறு வித்துவான், திரு. இராம கோவிந்தசாமி பிள்ளை, தருமபுரம் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், திருப்பனந்தாள் வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா. சென்னை பிர்மஸ்ரீ கே. எஸ், இராமகிருஷ்ண சாஸ்திரிகள் முதலியோர் சொற்பொழிவாற்றினர். நாகை வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் குழுவினரின் 'திருஞானசம்பந்தர்' கதாகாலக்ஷேபம் நடைபெற்றது.

26-4-66 செவ்வாய் மாலை 6-மணி. சுந்தரர் திருநாள். வேளூர் தேவஸ்தானம், திரு. க. சொக்கலிங்கம் கடவுள் வாழ்த்து ஓதினார். திருவாரூர் இராஜாங்கக்கட்டளை, கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள். சீகாழி பெருநிலக்கிழார் திரு. எம். டி. குழந்தைவேல் செட்டியார் தலைமையுரை நிகழ்த்தினார். வேலூர்

திரு. கி. இராமநாத ஆச்சாரியார், சென்னை கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார், தருமபுரம் வித்துவான், திருமதி. ப. நீலா, சென்னை சிரோமணி, பிர்மஸ்ரீ. டி. என். கோபாலசர்மா முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

27—4—66 புதன் மாலை 6-மணி. மணிவாசகர் திருநாள். தருமையாதீனம் திரு. ஆர். வேலாயுத ஓதுவா மூர்த்திகள் கடவுள் வணக்கம் ஓதினர். சீகாழி தேவஸ்தானம், கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினர்கள். சீகாழி பெருநிலக்கிழார் திரு. எஸ். விசுவநாத முதலியார் பி. ஏ. தலைமையில் மாநாடு தொடங்கிற்று. சீகாழி வித்துவான் திரு. கே. அரங்காசாரியார் எம். ஏ., பி. டி., அண்ணமலைப்பல்கலைக்கழகம், வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர், தருமபுரம் வித்துவான், திரு. வி. சபேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

28—4—66 வியாழன் மாலை 6-மணி திருமூலர் திருநாள். சென்னை, தருமை ஆதீன சமயப்பிரசார நிலையம் சங்கீதபூஷணம் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் ஓதினர். அண்ணமலைப் பல்கலைக்கழகம் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. திருவதிகை திரு ஆர். சண்முக சுந்தரம் செட்டியார், முதலியோர் விரிவுரையாற்றினர். திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்திகள் குழுவினரின் திருமூலர் கதாகாலக்ஷேபம் நடைபெற்றது.

29—4—66 வெள்ளி மாலை 6 மணி. காரைக்காலம்மையார் திருநாள். சீகாழி திரு. S. திருஞானசம்பந்தம் கடவுள் வாழ்த்துப்பாடினர். சீகாழி திரு. K. சுப்பிரமணிய ஐயர் B. A. வரவேற்புரை கூறினர். மாயூரம் சிவநேசச்செல்வர் திரு. V. இராமநாத ஐயர் பி. ஏ. தலைமையுரை நிகழ்த்தினர். சென்னை புலவர் திரு. N. R. முருகவேள் M. A. M. O. L., சென்னை திரு ச. சிவகுமாரன் M. A. முதலியோர் சொற்பொழிவாற்றினர் சென்னை சமயப்பிரசார நிலையம் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் குழுவினரின் பண்ணிசையரங்கு நடைபெற்றது.

30—4—66 சனி மாலை 5மணிக்கு யானைமீது திருமுறைத் திருவீதியுலா நடைபெற்றது. மாலை 6மணி. சேக்கிழார் திருநாள். சங்கீதபூஷணம் திரு. பி, சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினர். வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினர்கள். சிதம்பரம் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை எம். பி. பி. எஸ். அவர்கள் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்க்குப் பரிசு அளித்து விரிவுரை யாற்றினர். சிதம்பரம் திரு. பி. ஆர். சுவாமிநாதன் M. A. L T. சிதம்பரம் திருமதி. இராஜேஸ்வரி சுவாமிநாதன், திருவதிகை வித்துவான். திரு, சண்முகசுந்தர தேசிகர், ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

# சீகாழியில் திருமுலைப்பால் திருவிழா

## பண்ணிசைக் கலைஞருக்குப்

## பட்டமளிப்பு விழா.

திருஞானசம்பந்தப் பெருமான் உமையம்மையார் சிவஞானம் குழைத்து அளித்த திருமுலைப்பால் அருந்தி உலகமுய்யத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளிய திருநாள் சீகாழியில் 25—4—66 திங்கட்கிழமை மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

காலை 7 மணியளவில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். $9\frac{1}{2}$ மணியளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் திருஞானசம்பந்தப் பெருமானை சிவிகையில் எழுந்தருளச் செய்துகொண்டு உடன் எழுந்தருளினர்கள். திருஞானசம்பந்தப்பெருமான் திருக்கோயிலில் அற்புதவிளக்க விரிவுரை தொடங்கியது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் 'ஞானசம்பந்தப் பெருமான் நமக்களித்த திருமுறைக் கருவூலத்தின் சிறப்புக்களை தமிழுலகம் அறிந்து உய்தி பெறவேண்டும்' என்று குறிப்பிட்டு வாழ்த்துரை வழங்கியருளினர்கள். ஞானசம்பந்தப் பெருமான் தேவாரத் திருப்பதிகம் பாடத்தொடங்கியருளிய இத் திருநாளில் திருமுறை இசைவாணர் ஒருவரைப் பட்டமளித்துப் பாராட்டவேண்டுமென்பது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளம்.

இளமை முதல் திருமுறை இசைபயின்று பண்ணொன்ற இசைபாடி வருபவரும், தருமையாதீன இசைப்புலவர் இசையரசு முதலிய பட்டங்களைப் பெற்றுத் தமிழிசை மேடைகள் பலவற்றில் திருமுறைப் பண்களின் சிறப்பியல்புகளை விளக்கி வருபவரும், வானொலி, இசைத்தட்டுக்கள் படக்காட்சிகள் முதலிய பலதுறைகளிலும் திருமுறைமுழக்கம் செய்துவருபவரும் ஆகிய அண்ணமலைப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் இசையரசு திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஞானசம்பந்தப் பெருமான் சந்நிதியில் பொன்னுடை போர்த்தி 'திருமுறைக் கலாநிதி' என்னும் சிறப்புப்பட்டம் பொறித்த பொற்பதக்கத்தை வழங்கி ஆசியருளினர்கள்.

இசையரசு அவர்கள் 'திருமுறைகளை இளமைமுதல் ஓதி வருவதால்தான் இன்று உலகம் போற்ற வாழ்கிறேன் திருமுறை தான் என்னை வாழ்விக்கிறது' என்று குறிப்பிட்டு நன்றி தெரிவித்தார்கள்.

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், சிதம்பரம் டாக்டர் திரு. K. அரங்கசாமிப்பிள்ளை, தருமையாதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள், வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார், வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. K. M. வேங்கடராமையா நாகை தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் முதலியோர் அற்புத விளக்க விரிவுரை நிகழ்த்தினர். திருமுறைப் பாராயணத்துடன் ஞானசம்பந்தப் பெருமான் பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளினர். 1 மணி அளவில் பிரமதீர்த்தக் கரையில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு உமையம்மையார் பொற்கிண்ணத்தில் எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளித் திருமுலைப்பாலூட்டிய அற்புத நிகழ்ச்சி நடைபெற்றது. அன்பர்கள் பல்லாயிரவர் கூடியிருந்து இவ்வருட் காட்சியைக் கண்டுகளித்தனர்.


## "ஞானசம்பந்தம்"

### கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையோப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

சேயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுலைப்பால் திருவிழாவில்



ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கு
ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் பால் சமர்ப்பித்தல்.

# செய்திகள்

## திருக்கடவூருக்கு அறநிலைய ஆணையர் அவர்கள் வருகை.

தருமையாதீனம் திருக்கடவூர் தேவஸ்தானத்திற்கு சென்னை இந்து சமய அறநிலையங்களின் ஆட்சித்துறை ஆணையாளர் திரு. M. S. சாரங்கபாணிமுதலியார் B.A..B.L., அவர்கள் 21-4 66 வியாழக்கிழமையன்று திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி ஆலயத்திற்கு வருகை புரிந்து வழிபாடாற்றினார்கள். திருச்சி, தஞ்சை மாவட்டத்தில் மிகத் தூய்மையாகவும் செம்மையாகவும் பரிபாலிக்கப் பெறுவதற்காக முதன்முதலாக அறநிலைய ஆட்சித் துறையினரால் வழங்கப் பெற்றுள்ள சுழற் கோப்பையைப் பார்வையிட்டு வழங்கினார்கள்.

## திருமுறைக் கலாநிதி பட்டமளிப்பு.

திருநாவுக்கரசரை உலகிற்கு வழங்கிய திருத்தலம் திருவாமூர். திருவாமூரில் அப்பர்பெருமான் அவதரித்தஇடத்தில், திருக்கோயிலெடுப்பித்து அவர் இறைவன் திருவடி நீழலிற் கலந்தருளிய சித்திரைச் சதயத்திலும் மாதசதயங்களிலும் சிறப்பு விழாக்கள் நடத்தப் பெற்று வருவதை அனைவரும் அறிவர். இவ்வாண்டிலும் மிகச்சிறப்பாக 14, 15, 16-4-66 ஆகிய மூன்று நாட்களில் சித்திரைச் சதய விழா சிறப்பாக நடைபெற்றது.

திருநாவுக்கரசர் குருபூசை விழாவில் திருமுறை இசை வாணர் ஒருவரைப் பாராட்ட வேண்டுமென்பது தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவுள்ளம். அத்தகுதியை இந்த ஆண்டு முதன்முதலாகப் பெற்றவர், பல்லாண்டுகளாகத் திருமுறைப் பணிசெய்து வருபவர்களும், தேவாரப் பாடசாலைகள் பலவற்றில் தலைமையாசிரியராக இருந்து பலதிருமுறை இசைவாணர்களை உருவாக்கியவர்களும், தமிழ் இலக்கிய இலக்கணத்துறைகளில் தேர்ந்து வித்துவான் பட்டம் பெற்று விளங்குபவருமாகிய திருவிடைமருதூர் வித்துவான் திரு. மு. நடராஜதேசிகர்அவர்களுக்குத் திருமுறைக் கலாநிதி என்னும் பட்டம் அளித்துப் பாராட்டுவதெனத் திருவுளம் பற்றினார்கள்.

16—1—66 சனிக்கிழமை குருபூசைவிழாவன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவாரூருக்கு எழுந்தருளி அப்பர்சுவாமிகளுக்குப் பொன்னுடை சார்த்தி வழிபாடாற்றினார்கள். அப்பர் சுவாமிகள் குருபூசை விழாக் கழகத்தின் சார்பில் திரு. மு. நடராஜ தேசிகர் அவர்களுக்கு அப்பர் பெருமான் சந்நிதியில் 'திருமுறைக் கலா நிதி' என்னும் பட்டம் பொறித்த பொற்பதக்கத்தை வழங்கிப் பொன்னுடை போர்த்தி ரூ. 501 அடங்கிய அருட்கிழியளித்து ஆசியருளினார்கள்.

## திருவையாற்றில் பிரமோத்சவம்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருவையாறு தேவஸ்தானத்தில் 24—4—66 முதல் 3—5—66 முடிய பிரமோத்சவமும் 5—5—66 வியாழக்கிழமை சப்தஸ்தான விழாவும் சிறப்பாக நடைபெற்றன. விழாவையொட்டி பன்னிரு திருமுறை மாநாடு நடைபெற்றது. 26—4—66 செவ்வாய் திருப்பனந்தாள் வித்துவான். திரு. எம். சுந்தரேசம் பிள்ளை சம்பந்தர் திருமுறை, திருவையாறு திரு. ஜி. தனவேலுபிள்ளை அப்பர் திருமுறை, 27—4—66 புதன் திருமுறை விழா தேவாரவகுப்பு ஆண்டுவிழா. திருவையாறு வித்துவான். திரு. டி. வி. கோபாலய்யர், எம். ஏ. பி. ஓ. எல். சுந்தரர் திருமுறை, திருப்பனந்தாள் வித்துவான். திரு. தா. ம. வெள்ளைவாரணம் மணிவாசகர் திருமுறை. இரவு தேவார பாராயணத்துடன் திருமுறைத் திருவீதியுலா. 28—4—66 வியாழன் திருவையாறு வித்துவான் திரு. ஆபத்சகாயம் அய்யர் ஒன்பதாந் திருமுறை, திருப்பனந்தாள் வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி பத்தாந்திருமுறை, இசையரங்கு இசையரசி குமாரி ஆர். கமலா முழுவினர். 29—4—66 வெள்ளி வித்துவான். திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை பதினொன்றாந் திருமுறை, திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம் பன்னிரண்டாந் திருமுறை, திருவாரூர் திரு. வி. மு. பெரியதம்பிபிள்ளை திலகவதியார் திருத்தொண்டு 30—1—66 சனிக்கிழமை பிர்மஸ்ரீ. கே. எஸ். இராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஸ்துதிமணிமாலா. இவ்வாறு முறையே சொற்பொழிவுகள் நடைபெற்றன.

## திருக்கடவூரில் சித்திரைப் பெருவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 24—4—66 முதல் 3—5—66 முடிய பிரமோற்சவமும் 29—4—66 காலசம்ஹார விழாவும் நடைபெற்றன, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காலசம்ஹார விழாவன்று எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். விழாவையொட்டி சமயப்பிரசாரம்

நடைபெற்றது. 24—4—66 ஞாயிறு தருமபுரம் வித்துவான். திரு. வி. சபேசன் சம்பந்தர். 27—4—66 புதன் தருமபுரம் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அப்பர், பூம்புகார் திரு. சி. இராமலிங்கம் சுந்தரர், 28—4—66 வியாழன் வித்துவான் திருமதி ப. நீலா மணிவாசகர், 29—4—66 வெள்ளி தருமபுரம் வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார் சேக்கிழார், நாகை. வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் குங்குலியக் கலயர் 30—4—66 சனி திருவையாறு வித்துவான். திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளை அபிராமி பட்டர் இவ்வாறு முறையே சொற்பொழிவுகள் நடைபெற்றன.


### சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலைய மாதாந்தர வழிபாட்டுக் குழுவினரின் ஏழாவது

# ஆண்டு நிறைவு விழா

நிலைய வழிபாட்டுக் குழுவின் ஏழாவதாண்டின் நிறைவுவிழா சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 21—4—66 ஞாயிறன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் குழுவின் சார்பில் ஸ்ரீ பிரமபுரீசர், திருநிலைநாயகி திருஞான சம்பந்தருக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீ பிரமபுரீசர் சந்நிதியில் வழிபாடு நிகழ்ந்துகொண்டிருக்கும் போது சுப சூசகமாகக் கருதும்படி திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளும் இளவரசு வித்துவான். ஸ்ரீமத். முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும் எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தினர்கள். அவர்களுடன் தொடர்ந்தே திருநீற்றுப் பதிகம் ஓதி வலம்வந்து தோணியப்பர், சட்டைநாதர், அம்பாள், சந்நிதிகளில் வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன.

திருஞானசம்பந்தர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரையுடன் ஆண்டுவிழா விரிவுரை தொடங்கியது. சுவாமிகள் எட்டாவது ஆண்டைத் தொடங்கும் வழிபாட்டுக்குழு எண்குணத்தானுகிய சிவபெருமானைப் போற்றி வாழ்க என வாழ்த்தினர்கள். எட்டாந் திருமுறை முதலில் நமச்சிவாய வாழ்க எனத் தொடங்குவதால் நமப் பார்வதி பதயே எனச் சொன்னுல் பதிலுக்கு நமச்சிவாய என்று சொல்லுங்கள். அதுதான் சிறந்தது. என்று உபதேசித்தார்கள். வித்துவான். திருமதி. மீனுட்சிசுந்தர சிவை, திருமதி. மீனுட்சியம்மையார் இருவரும் சம்பந்தர் பற்றியும், சமய வாழ்வு பற்றி

திருவாரூர் அப்பர் சுவாமிகள் குருபூஜைவிழாவில்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள்



திருவிடைமருதூர் வித்துவான், திரு. மு. நடராஜதேசிகரவர்களுக்கு
"திருமுறைக்கலாநிதி" என்றபட்டமளித்துப் பொன்னுடை போர்த்தி
ரூ. 501. அடங்கிய பணமுடிப்பு அளித்தல்.

திருவாரூர் ஸ்ரீ மாதினியார் சிவபூஜைநிலையத் திருப்பணிக்கு
தென்னாற்காடு மாவட்ட மாதர்சங்கங்களின் சார்பில் அளித்த
ரூ. 3225. அடங்கிய பணமுடிப்பை



சென்னைராஜ்ய மாதர்நலக்குழுத்தலைவி ஸ்ரீமதி சரோஜினி
வரதப்பன், வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்
சுவாமிகள் அவர்களிடம் வழங்குகிறார்.

யும் பேசினர்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவின்ருர்கள். திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் கூறினர்.

## வைத்தீஸ்வரன்கோயில்
## சித்திரைமாதக் கிருத்திகை உபயவிழா

நிலைய அன்பர்களான திரு. K. C. நாகலிங்க முதலியார்' புதுவை திரு. K குப்புசாமி முதலியார், திரு. வைத்தியலிங்க முதலியார், திரு. P. G. செங்கல்வராய செட்டியார், திரு. T. G. ஏழுமலை நாயகர், திரு. P. N. குப்புராவ் முதலியவர்களின் உபயமாக வைத்தீஸ்வரன்கோயிலில் 23—4—66 கிருத்திகையன்று சுவாமி, அம்பாள், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு ரூ. 800 செலவில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கச்செய்து ஆசீர்வதித்தார்கள். ஷ பிரசாதங்கள் 26—4—66 மாலை 7-மணிக்குச் சென்னை சமயப் பிரசார நிலையத்தில் திரு. K. கமலக்கண்ணன் M. L. C., தலைமையில் வழங்கப்பெற்றது. திருமயிலைக் கபாலீச்சரம் ஓதுவார். திரு. L. M. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினர். திரு. என். ஆர். முருகவேள், திரு. நல் முருகேச முதலியார் இருவரும் பிரசாதப்பெருமை பற்றிப் பேசினர். வேளூர் சிவாசாரியர் அனைவருக்கும் விபூதி குங்குமப் பிரசாதமும், மாத்திரை, சந்தனக்குழம்புப் பிரசாதமும் வழங்கினர்.

## பராபவ வருஷப்பிறப்பு விழா

தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் 14—4—66 வியாழக்கிழமை மாலை 6-மணிக்குப் பராபவ வருஷப்பிறப்பு விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. சென்னை மாநில முன்னள் சர்வீஸ் கமிஷன் தலைவர் திரு. வி. இரத்தின முதலியார் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். வைத்தீஸ்வரன்கோயில் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் பஞ்சாங்க பூசை செய்தார். "ஜோதிஷமணி" ஆசிரியர் பிரம்மஸ்ரீ V. K. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் பஞ்சாங்க படன விளக்கம் செய்தார்கள். வளம் பெருகாவிட்டாலும் சுபக்கிரகமாகிய புதன் அரசராகவும், மந்திரியாகவும் இருந்து முக்கிய இலாக்காக்களை ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்த ஆண்டில் அதிக சிரமம் ஏற்படாது என்று பஞ்சாங்க படன விளக்கத்தில் குறிப்பிட்டார்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினர்.

# எதிர்காலம் -திரு. கே. முத்துஜோதிடர்

( பராபவஸூ வைகாசிமீ 1உ முதல் 32உ முடிய )
( 14—5—66 முதல் 14—6—66 முடிய )

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். அடிக்கடி வீண் அலைச்சல்களும் வியாபாரிகளுக்கு கிரஹ விக்ரயங்களில் லாபம் இல்லாமலும் மத்திய காலங்களில் சுபசோபனாதிகள் மூலம் விசேஷ விரயங்களும் காலிகன்றுக் குறையும், ஈதிபாதைகளும் ஏற்படும். ஆனாலும் சிற்சில நூதனமான தொழில்களையும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரமும் நூதனமாக ஸ்திர ஜீவனங்களும் வெகுகாலமாய் நடந்துவரும் வியவகாரத்தில் ஜெயமும். தீராதவியாதி நிவாரணமும், புத்திராதிகளால் சௌக்கியமும் உண்டுபண்ணும். புதன் வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும், நூதனமான முறையில் தொழிலும் வெகுகாலமாய் தீராத கடன் நிவர்த்தியும், நூதன பிரதிஷ்டைகளும் கிரக நிர்மாணமும் சுபாதிகளும் உண்டுபண்ணும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் கிரக விக்ரயமும் கூட்டாக நூதன தொழில்கள் ஆரம்பித்தலும் விவாகாதி சுபகாரியங்களும், தூரதேசப் பிரயாணமும், ஆரோக்யமும் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மேல் பதவிகளைத்தரும்; குடும்ப விருத்தியாகும். களத்திர புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். ஆரோக்யம் உண்டாகும்; வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். நம்பினவர்கள் மோசம் செய்வார்கள். கட்டிட வேலைகள், ஏற்பட்டு அதிகசெலவினங்களை உண்டுபண்ணும். ஆரோக்கியக்குறைவால் வைத்தியசெலவு அதிகமாகும். ஆனாலும் தெய்வபலம் முன்னின்று காக்கும். நூதனமாக தெய்வீகயக்ஞ யாகங்கள் நடந்து தெய்வ சத்தியைப் பலப்படுத்தும். ராஜாங்கத்தால் நன்கு மதிக்கப்பட்டு கீர்த்தியை உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

துலாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். குடும்ப விருத்தி ஏற்படும். நூதன கட்டிட வேலைகளும் கிரய விக்கிரயங்களும் ஏற்படச்செய்யும். மேலோர் பெரியோர்களாலும், ராஜாங்கத்தாலும் நன்மை உண்டாகும். வாகனவிருத்திகளும் ஏற்படும் புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼-அனுஷம்-கேட்டை

விசாகம் 4ம் பாதமும் அனுஷம் நான்கு பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். கவலை அதிகமாகும். வீண் செலவுகளும் அலைச்சல்களும் உண்டுபண்ணும். கேட்டை நான்கு பாதங்களும் சுபத்தைத்தரும். நஷ்டமான பொருள்கள் தானாக வந்துசேரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். இடம் மாறல் ஏற்பட்டு சுபம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தீராத கவலைகள் நீங்கி குடும்ப விருத்தியும் உண்டுபண்ணும். ஜீவன விருத்தியாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் வெகு தூர தேசத்திலிருந்து புத்திராதிகளிடமிருந்து சந்தோஷ சமாசாரங்கள் வந்து சேரும் விவாகாதி சுபங்கள் நடக்கும். கிரய விக்ரயங்களில் லாபம்தரும். நண்பர்களாலும் ராஜாங்கத்தாலும் நன்மை உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

**11. கும்பம் - அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾.**

கும்பராசி 9 பாதங்களும் நன்மையை உண்டுபண்ணும் புத்திராதிகளால் சுபம் உண்டாகும். மேலோர் பெரியோர்களாலும் ராஜாங்கத்தாலும் சுபத்தைத் தரும். நூதனமான தொழில்களைத் தரும். கட்டிட வேலைகள் உண்டாகும். எங்கும் கீர்த்தி ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் மகத்தான சௌக்கியத்தைத் தரும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். தொழில் ஓங்கும். விவாகாதி சுபங்களும் தெய்வீகமான யக்ஞயாகாதிகளும் உண்டு பண்ணி தெய்வபலம் பிரகாசிக்கும். உலகப் பிரசித்தி ஏற்படச் செய்யும். ஆரோக்யம் உண்டாகும். குடும்பம் தழைத்து ஓங்கும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

## முக்கிய கவனிப்பு

ஸ்ரீமான்கள், கனதனவான்கள், தர்மிஷ்டர்கள், சஜ்ஜனங்கள், ஆஸ்தீகர்கள் எல்லோருக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது. நாளது வருஷத்தில் வைகாசி மாதம் முதலே வருஷம் முடிய கிரக நிலைகள் உத்பாத ரூபமாக அமைந்து இருக்கிறபடியால் ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவாலய புண்ணிய க்ஷேத்திரங்களிலும் மகாநதிதிரங்களிலும் அந்தந்த தேவதைகளுக்கு லக்ஷம் கோடி அர்ச்சனைகளும் லக்ஷம் கோடி ஹோமங்களும் உத்பாத கிரக சாந்திகளும் மகாஜனங்கள் உலக க்ஷேமத்தின் பொருட்டு ஒன்றுசேர்ந்து நடத்திக்கொள்ள உலகில் சகலவிதமான ஈதிபாதைகளும் நிவர்த்தியாகி பரசத்ர பயமும் நீங்கி, ஆங்காங்கு பர்வகாலங்களில் பெய்யவேண்டிய மழைகள் சுபிக்ஷகரமாகப் பெய்து ஸஸ்ய விருத்தி தான்ய விருத்திகளைக் கொடுத்து உலகெங்கும் சுபிக்ஷம் ஏற்பட்டு சந்தோஷம் அடையச்செய்யும். சமஸ்தமங்களமும் உண்டாகும்.